உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி 7 } துன்மதி௵ பங்குனி மீ ௧௳ / 1922௵ மார்ச்சு மீ 14௳ { பகுதி 9

## கடவுள் வணக்கம்.

கொந்தவிழ் மலர்ச்சோலை நன்னீழல் வைகினுங்
குளிர்தீம் புனற்கை யள்ளிக்
கொள்ளுகினு மந்நீ ரிடைத்திளைத் தாடினுங்
குளிர்சந்த வாடை மடவார்
வந்துலவு கின்றதென முன்றிலிடை யுலவவே
வசதிபெறு போதும் வெள்ளை
வட்டமதி பட்டப் பகற்போல நிலவுதர
மகிழ்போதும் வேலை யமுதம்
விந்தைபெற வறுசுவையில் வந்ததென வமுதுண்ணும்
வேளையிலு மாலை கந்தம்
வெள்ளிலை யடைக்காய் விரும்பிவேண் டியவண்ணம்
விளையாடி விழிதுயி லினும்
சந்ததமு நினதருளை மறவா வரந்தந்து
தமியேனை ரக்ஷை புரிவாய்
சர்வபரி பூரண வகண்டதத் துவமான
சச்சிதா னந்த சிவமே.

---

பேசா வனுபூ தியையடியேன் பெற்றுப் பிழைக்கப் பேருளால்
தேசோ மயந்தந் தினியொருகால் சித்தத் திருளுந் தீர்ப்பாயோ
பாசா டவியைக் கடந்தவன்பர் பற்று மகண்டப் பரப்பான
ஈசா பொதுவி னடமாடு மிறைவா குறையா வின்னமுதே.

இன்பக் கடலிற் புகுந்திடுவா னிரவும் பகலும் தோற்றும[illegible]
அன்பிற் கரைந்து கரைந்துருகி யண்ணு வரசே யெனக்[illegible]
பின்புற் றழுசே யெனவிழிநீர் பெருக்கிப் பெருக்கிப் பித்தாகி
துன்பக் கடல்விட் டகல்வேனோ சொரூபா னந்தச் சுடர்க்கொழுந்தே.

# ஆனந்தபோதினி

துன்மதி௵ பங்குனி௴ கஉ

## சுயநலம்.

ஒருவன் தனக்கு அனுகூலத்தையோ இலாபத்தையோ பெற விரும்புவதற்குச் சுயநலம் கருதல் என்று பெயர். உலகத்தில் சுயநலங் கருதாதவன் ஒருவனுமில்லை. ஒன்றும் வேண்டாதவன் எவன்? வேண்டுவதும் வேண்டாமையும் இல்லாதவன் ஆண்டவன் ஒருவனே. மக்களில் ஞானி யொருவனே. தான் நலம் பெறவேண்டும், ஜயம்பெறவேண்டும், செல்வம் பெறவேண்டும், புகழ்பெற வேண்டும் என்று கருதாதவர் ஒருவரு மிரார். அந்த நாட்ட மின்றேல் உலகம் எப்படி நடைபெறும்? ஜனசமூகம் எப்படி மேலோங்கி வரும்?

அப்படியிருக்க "அப்பா! அவன் சுயநலம் துறந்தவன்" என்று சுயநலநோக்கத்தை இழிவாய்க் கூறுவதேன்? இச்சுயநல நோக்கம் இயற்கையிலேயே அமைந்துள்ளது. எல்லாம் கடவுளின் சிருட்டிப்பே. இந்தச் சுயநல எண்ணமும் கடவுள் சிருட்டிப்பே. கடவுள் சிருட்டியில் கெட்டது எதுவுமே யில்லை. கடவுள் நமது நன்மைக்கென்றே எதையும் செய்கிறார். ஆனால் நமது நன்மைக்கென்று அவர் நமக்கு அளித்தவைகளை நாம் எப்படி யுபயோகிக்கிறோமோ அதன்படி அவை நல்லவையாகவோ தீயவையாகவோ ஆகின்றன.

கடவுள் ஒருவனுக்குச் செல்வமும் அதிகாரபலமும் அளிக்கிறார். அவன் அவற்றைக்கொண்டு பிறருக்கு நன்மையும் செய்யலாம், தீமையும் செய்யலாம். செல்வமும் அதிகாரமுமாகிய அவை என்ன [illegible]ய்யும்? இவன் அவற்றை நல்வழியில் உபயோகித்தால் நன்மை[illegible] தீயவழிகளில் உபயோகித்தால் தீமையும் அடைகிறான். உலகில் எப்போதும் நன்மை தீமை, நல்லது கெட்டது, என்ற மாறான இரண்டுமே யிருக்கும். அமைப்பே அத்தன்மைத்து

ஒன்றில்லாவிட்டால் மற்றொன்று பிரகாசியாது. ஆகையால் நல்லது என்றால் கெட்டது அடியோடில்லாமற் போவதல்ல. ஆனால் கெட்டதை யடக்கி யாள்வதே நல்லது.

ஆகையால் சுயநலம் இருக்கவே வேண்டும். மனிதன் சுயநலம் கருதாது எதையும் செய்வதில்லை. பொதுநலத்திற்காகச் சுயநலத்தைத் தியாகம் செய்பவனும் தன் தாய்நாடு க்ஷேமமடைய வேண்டும், அதனால் தான் சந்தோஷ மடையவேண்டும் என்ற ஒரு நலத்தைக் கோரியே செய்கிறான். இகலோக பரலோக பாக்கியங்களையும் தன் தேகத்தையும் கூட வெறுத்துவிடுவதாகிய சகல சங்க பரித்தியாகம் செய்பவன்கூட என்றுமழியாத பேரின்ப வாழ்வு கிடைக்குமென்ற நோக்கத்தோடுதான் அவ்வாறு செய்கிறான். இதுவும் சுயநல நோக்கந்தானே. அப்படி யிருக்க யிகழ்வதேனெனில்,

சுயநலத்தையும் அளவோடு அடக்கி யாளவேண்டும். நமது சுயநலத்தைத் தியாகம் செய்வதால் பிறருக்கு நன்மை விளைவிக்கக் கூடியதாக விருக்கும் சமயங்களிலும், நமது சுயநல நோக்கத்தால் பிறர் நலத்திற்கு இடையூறு நேரிடுவதா யிருக்கும் சமயங்களிலும் நமது சுயநலத்தைத் தியாகம் செய்ய ஆயத்தமா யிருக்க வேண்டும். இத்தகைய குணமுடையோர்களே பொதுநல ஊழியம் செய்யத்தக்க புண்ணிய புருடர்க ளாவார்கள். இத்தகையோரால்தான் தாய் நாடு க்ஷேமமடைந்து மேலோங்கும். இவர்கள் தங்களுக்குக் கௌரவம் வேண்டும், செல்வம் அதிகமாக வேண்டும், அதிகாரம் வேண்டும் என்று கருதமாட்டார்கள். தாங்கள் கருதும் பொது நலம் கைவர வேண்டுமென்ற ஒன்றே அவர்கள் நாட்டம். அதனால் வரும் கௌரவம் யாருக்குக் கிடைப்பதாயினும் அதைப்பற்றி அவர்கள் கருத மாட்டார்கள்.

அப்படிக்கின்றி பிறர் நலத்திற்கோ பொது நலத்திற்கோ இடையூறுண்டாக்கத்தக்க விதமாய்ச் சுயநலத்தை நோக்குவதே மிக்க இழிவாகும். அத்தகைய மனிதன் ஒருபோதும் பொது நல ஊழியத்திற்கு அருகனாகமாட்டான். அவனால் பொது நலத்திற்கு இடையூறே நேரிடும்.

ஒரு ஊரில் தாய்ப்பாஷைக் கல்வியை யபிவிருத்தி செய்ய ஒரு சங்கத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்று சபை கூடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். சபையிலுள்ள அறிவாளிகளில் சிலர்

கல்வி, கேள்விகளிற் சிறந்தவரும் உலக அனுபவமுடையவருமாகிய ஒரு பெரிய மனிதரை அச்சபையின் அக்கிராசனராக ஏற்படுத்தக் கருதுகிறார்கள். அச்சமயம் அங்குள்ள இன்னொருவர் அக்கிராசனாதிபதி என்ற கௌரவத்தைத் தாம் அடையவேண்டும் என்ற ஆசைகொண்டு, தமக்குச் சினேகரான சிலரைத் தூண்டுகிறார். அவர்கள் இவரே அக்கிராசனாதிபதியாக வேண்டுமென்கிறார்கள். இதனால் உடனே கட்சி இரண்டாகிக் கடைசியில் எடுத்த காரியம் கலைந்துவிடுகிறது. இத்தகைய சுயநலமே இகழத்தக்கது. அதைக் கைகூடாமல் செய்யும் சபையுடையோரும் இகழத்தக்கவர்களே. இவர்கள் தாய்நாட்டின் க்ஷேமத்திற்கே இடையூறு செய்பவர்கள்.

மற்ற நாடுகளைக் காட்டிலும் நமது நாட்டில் தாய் நாட்டின் க்ஷேமத்திற்காக உழைக்க முன்வருவோரில் பலர் மேற்கண்ட இழிவான சுயநல நாட்ட முடையோராக விருக்கின்றனர். சாதாரணமாக நகர சங்கத்தில் (முனிஸிபாலிடி) ஒரு அவயவியாகத் தெரிந்தெடுக்கப்பட விரும்புவோர் அப்பதவியைப்பெற எவ்வளவோ பெரும் பிரயத்தனங்கள் செய்வதோடு அதிகப்பண விரயமும் செய்கிறார்கள். வாக்குக் கொடுப்போரிடம் (ஓட்டர்கள்) நேரில் அவர்கள் வீடுகளுக்குச் சென்று தாங்கள் ஜனங்களுக்கு எவ்வளவோ நன்மைகளைச் செய்யக் கருதியே அப்பதவியைப் பெற விரும்புவதாய்க் கூறித் தங்களுக்கே வாக்களிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறார்கள். வாக்களித்து இவர்களைத் தெரிந்தெடுக்க வேண்டிய காலம் நெருங்கும் சமயம் இந்த அபேக்ஷகர்களும் இவர்களுக்காக வேலை செய்யும் ஆட்களும் வீதிகளில் பன்முறை வீடு வீடாக வரக்காணலாம். அப்போதிவர்கள் ஜனங்களுடைய கஷ்டங்களை நிவர்த்தி செய்யவும் நகர சுத்தியையும் ஜனங்களின் சுகம் முதலிய சௌகரியங்களையும் அபிவிருத்தி செய்வதற்காகவுமே நகரசபையின் ஒரு அங்கத்தினராய்ச் சேர விரும்புகிறதாகப் பறை சாற்றுகிறார்கள். ஆனால் பெரும்பாலார் அப்பதவியை படைந்தபின் முற்றும் மாறாக நடந்து கொள்ளுகிறார்கள். பிறகு இவர்களை வீதியில் காண்பதெனில் குதிரைக் கொம்பே. வீடு தேடி யிவர்களை யாரேனும் காணச்சென்றாலும் பேட்டி கிடைப்பது அரிதே.

இத்தகையோர் அப்பதவியை யடைந்ததே, அதிகார வர்க்கத்தினர் மனப்போக்கின்படி தாளம் போடத் தீர்மானித்து விடுகிறார்கள். பிறகு ஏழை ஜனங்களைப்பற்றி இவர்களுக்கு அக்கறையே

யில்லை. தங்களை யார் அப்பதவியில் ஏற்றினர்களோ அவர்களை அடியோடு அலட்சியம் செய்துவிடுகிறார்கள். மாதம் 1500 சம்பளம் பெறும் உத்தியோகஸ்தருக்குத் தினப்படி 5 ரூபாயாக இருப்பதை 10 ரூபாயாக்க வேண்டுமென்று ஒரு பிரேரேபணை கொண்டுவரப் பட்டால், அதற்கு ஆம் ஆம் என்று தலையாட்டி விடுகிறார்கள். ஏழை உபாத்தியாயர்களுக்கு 12 ரூபா சம்பளம் போதாது, 20 ரூபாயாக்க வேண்டுமென்றால் அதை மிக்க அனாவசியமான யோசனை யென்றும், இன்னொரு சமயம் பார்த்துக்கொள்ளலா மென்றும் கூறிவிடுகிறார்கள். தங்களுக்கு அதிகார வர்க்கத்தினர் தயவு இருந் தால் பின்னாலாவது ஒரு பட்டங் கிடைக்கும் என்று பகற்கனாக் காண்கிறார்கள். இதனால் இவர்கள் தங்களுக்குக் கிடைக்கும் சில சௌகரியங்களையும் அனுகூலங்களையும் கருதியே அப்பதவியை யடையப் பாடுபடுகிறார்கள் என்று வெளிப்படையாய் யாவருக் கும் புலப்படும்படி நடந்து கொள்ளுகிறார்கள்.

இன்னும் சிலர் பெரிய தேச சேவை செய்பவர்களாக ஆரம் பித்துப் பெரிய அதிகாரம் உள்ள உத்தியோகமோ, பட்டமோ கிடைக்கத் தக்க சந்தர்ப்பம் நேர்ந்தால் உடனே தங்கள் தாய் நாட்டிற்கு எத்தகைய தீங்கு விளைவிக்கும் காரியங்களையும் செய்யத் துணிந்து விடுகிறார்கள். தாய் நாட்டிற்குத் துரோகிகளாய்த் திரும்பி விடுகிறார்கள்.

நேயர்களே! இவர்களெல்லாம் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்புகளாவர். இத்தகைய சுயநலப் பிரியமே நஞ் சினும் கொடிது. ஏனெனில் நஞ்சு, உண்டவனை மட்டும் கொல்லும். இச்சுயநல நோக்கம் இதையுடையவனையும் அவன் ஊரிலுள்ளாரை யும் அழித்து விடும். சாதாரணமாகக் கற்றோரென்றும், மிக்க விவகாரம் தெரிந்தவர்களென்றும் கருதப்படுவோர்களில் சிலரிடங் கூட இத்தகைய சுயநலப் பேய் இருக்கிறதென்றால் மற்றையரிடம் கேட்கவும் வேண்டுமோ. சுயநலத்தைத் தியாகம் செய்யும் குண மில்லாதவன் ஒருபோதும் பொது நலம் செய்யக் கூடியவனாக மாட் டான். அவன் எவ்வளவு சாதாரணக் கல்வி யுடையவனாயினும், எவ்வளவு செல்வமுடையவனாயினும், செல்வாக்குடையவனாயினும் மிக்க இழிவானவனே யாகும். இத்தகைய சுயநல எண்ணம் நம் தாய் நாட்டாரிடமிருந்து ஒழியும் வண்ணம் சர்வ வல்லமையுள்ள பரம்பொருளைப் பிரார்த்திப்போமாக.

ஓம் தத் ஸத்.

## உபவாசம்.

உபவாசம் என்பதற்குப் பட்டினி யென்று பொருள். யாராவது சாப்பிடாமலிருந்தால் உபவாசமிருக்கிருனென்று கூறலாம். இது தற்போது விரததினங்களில் பட்டினியிருத்த லென்னும் பொருளில் வழங்கப்படுகிறது.

விரதநாட்களில் உபவாசமிருத்தல் பெரும்பாலும் எல்லா மதத்திலும் உண்டு. இந்துக்களுக்கு கிருத்திகை, அமாவாஸ்யை, ஏகாதசி, சிவராத்திரி முதலியன விரதநாட்களாகும். ஒவ்வொரு விரதத்திற்கும் உபவாசம் விதிக்கப்பட்டிருக்கிறது. உபவாசமில்லா நோன்பேஇல்லை யெனலாம். விரதங்களை விதிப்படி யனுட்டிப்போ ரடையும் பலாபலன்களின்னின்ன வென்று அவற்றின் மகிமைகளை யுணர்த்தும் நூல்களும் எண்ணிறந்தவுள. உபவாசத்தையே முக்கியமாகக் கொண்டுள்ளதாகலின் விரத மிருப்போர் உபவாசத்தைக் கைக்கொள்ள லவசியம். நோன்பு என்னும் பதத்திற்கு உபவாசமென்றொரு பொருளு முண்மை அதன் அவசியத்தை உறுதிப்படுத்தும். உதாரணமாக,

கிருத்திகைவிரத மனுட்டிக்கவேண்டின், அதற்கு முந்தின தினமாகிய பரணியன்று, பகற்பொழுது மாத்திர முண்டு கிருத்திகை யன்றும் பகல் ஒருபோ துணவுகொண் டிருத்தல் வேண்டும். தேவையானுல் இராக்காலங்களில் சிறிது பலகாரம் பண்ணலாம். இவ்வாறு உபவாசமிருந்துகொண்டு தீயசெயல்களை விட்டுப் பரிசுத்தராய் பகவத் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கவேண்டும். இதுவே உபவாச க்ரமம். இவ்வாறே மற்றவைகளுக்கும் அனுட்டானவிதிக ளேற்பட்டுள்ளன.

தற்காலம் விரதானுட்டானிகள், அந்தோ! மிக்க விபரீத ஞானமுடையவர்களா யிருக்கின்றனர். பரணியன்றிரவு சாப்பிடப் புகும்பொழுதே, 'நாளையதினம் கிருத்திகை உபவாச மிருக்கவேண்டுமே' யென்ற கவற்சி யுடையோராய்க் காலையில் பசியுண்டாகாதிருக்க விலாப்புடைக்க அடைக்கின்றனர். காலையில் கொஞ்சமாகவே ஐந்தாறு வாழைப்பழம் அல்லது இரண்டுகோப்பை உப்புமாவும், ஒருசொம்பு காபியும் அருந்துவது. பகல் சாப்பாடானதும் 'இராத்திரிக்கு என்ன பலகாரம் செய்வது' என்றும் எண்ணம் வந்துவிடுகிறது. உடனே தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுப் பலகாரம் சித்தமாகும். (பலாகாரம் என்பதைப் பலகாரம் என மாற்றிக் கொண்டனர். பல+ஆகாரம்=பலாகாரம்=அது பழவுணவு. பலகாரம்=வீட்டில் செய்யப்படும் அப்பம் முதலியவை.) எப்போது இருட்டும் என்றெதிர்பார்த்திருந்து இரா வந்ததும் வயிறூரப் புசிக்கிறது. இதுவோ உபவாசம். இதை விட்டு ஏன் சோறு தின்னலாகாது? பலகாரங்களுக் காசைப்பட்டு விரதமிருப்போருமுண்டு. பருகப் பசியில்லாதபோ துபவாசம், பசித்தால் ஒரு பானை பருக்கையும் காசம்' என நன்றாய்ச் சொன்னர் வேதநாயகம் பிள்ளையவர்கள்.

பட்டினி கிடப்பதால் வரும் பயன் யாதெனச் சிலர் கருதலாம். நம் பெரியோர்கள் எதையும் ஆலோசியாமல் கண்மூடித்தனமாய் ஏற்படுத்த வில்லை. உபவாசம் என்பதில் எத்தனையோ தத்துவங்கள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றுள் முக்கியமான சிலவற்றை ஈண்டு கூறுவாம்.

சிறிது நேரம் தாங்கள் பட்டினி யிருப்பதால் பசியின் கொடுமை இத் தன்மைத் தென்றுணர்கிறார்களாகையால், அப்பசியால் வருந்துவோரைக் காணின் கன்னெஞ்சராயினும் மனமிரங்கி அன்னதானஞ் செய்வார்கள். அதனால் மிக்க புண்யமுண்டாம். இன்றேல், எலுமிச்சம்பழ அளவுள்ள பொன்னை வைத்திருந்த சவாகன் ஊரிலுள்ள யாவரும் செல்வர்களே யென்று அரசனிடம் கூறிய கதையையும், 'பசியின் கொடுமை புளியேப்பக் காரனறிவானோ' என்னும் பழமொழியையும் போல, பிறர் துன்பமறியாம லிருக்க ஏதுவாகும்.

சுகாதார விதிக்கும் இது இன்றியமையாதது. யாவருக்கும் எப் போதும் பசியின் உணர்ச்சி யிருந்துகொண்டே யிருக்க வேண்டும். சரீரத் தோடு சம்பந்தப்பட்டே யிருக்கும் வாதபித்த சிலேஷ்மங்களால் ஊறுபா டுண்டாவதற்குக் காரணம் உணவே யாகும். உண்ட உணவு ஜீர்ணமாகி நன்றாகப் பசி யுண்டான பின்பே புசிக்கவேண்டும். பசி யெடுக்கும்போது சீர்ணித்து விட்டதெனல் கூடாது. உணவு சீர்ணிக்குமே யன்றி அதன் சத்தாகிய இரத்தம் அற்றிராதாதலால் மிகப் பசித்து உண்ணவேண்டும். தெய்வப் புலவர் திருக்குறளில் 'மருந்து' என்னும் அதிகாரத்தில், 'நன்றாகப் பசிகொண்ட பிறகே சாப்பிடவேண்டும், சரீரம் அழியாமலிருப்ப தற்கு இதுவே ஏற்றமருந்து, மற்ற மருந்துகள் வேண்டியதில்லை,' யென்று வற்புறுத்திக் கூறியிருத்தலையும்; அதன் உரையில் ஆசிரியர் பரிமேலழகர், 'உடம்பு சிறுகியிருத்தல், நோக்கம் பரிசுத்தமா யிருத்தல், காசாளுதி காரணங்கள் தொழிற்குரிய வாதல், பசி மிகுதல் முதலாயின உண்ட உணவு ஜீர்ணித்ததை யறிதற்குக் குறிகள்; இக்குறிகளுண்டான பின்பே புசிக்க வேண்டும்.' எனக் கழறியிருத்தலையுங் காண்க. அன்றாடம் அகப்பட்டதை யெல்லாம் தின்று திரிவோர்க்கு இத்தகைய உபவாசம் எத்தனை நன்மை பயக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ? இதை யறியாது "உபவாசம்." "உபவாசம்." என்று சொல்லிக்கொண்டு, கிண்டின அரிசிமா, உப்புமா, கொழுக்கட்டை முதலிய சரீர சுபாவத்தோடு மாறுபட்டவைகளைப் புசித் தல் 'அவிழ்க்கப்போயும் முடிபோட்டுக் கொண்ட' கதைபோலன்றோ முடியும்.

உணவு மிகுதலாற் றுன்ப முண்டாதல் போலவே குறைதலானும் துன்ப முண்டாகுமே யெனின், அதன் பொருட்டே சிறிது பலகாரம் விதிக்கப்பட்டதென்க. பழமே சாப்பிட வேண்டுமென்பதென்ன? மற்றப் பலகாரங்கள் ஏன் கூடா? அவ்விரண்டிற்கும் தாரதம்மிய முள்ளவா

றெங்ஙனே யெனின்: மனிதர்க்குள்ள குணங்கள்: சத்துவம் இராசதம் தாமதம் என மூன்று. இம் மூன்றனுள் சத்துவகுணமே இயற்கை யானதும் கொள்ளத் தக்கதுமாம். ஏனையிரண்டும் நீக்கத் தக்கவை. நாம் அருந்தும் பதார்த்தங்களிலும் இக்குணங்களுண்டு. பாலும், பலமும் சத்துவகுண பதார்த்தங்களாகலின் அவற்றை யுட்கொள்வதால் ஞானம், அருள், தவம், வாய்மை முதலிய குணங்கள் தலைப்படும். புளிப்பு, கார்ப்பு முதலியவை தாமதகுணப் பொருள்களாதலின் அக்கலப்புள்ள பலகாரங்கள் விலக்கப்படும்.

உபவாசமூலம் கொடுந் துன்பமாகிய பசியைச் சகித்துக்கொண்டிருக்கப் பழகுவதால் வேறெவ்வித துன்பங்கள் நேரிடினும் பொறுத்துக் கொள்ளும் பொறுமை யுண்டாகும்.

எல்லாத் துன்பங்கட்கும் உற்பத்தி ஸ்தானம் பிறவியே. பிறவியறுதலே பேரின்பமாகிய வீடு. அப்பிறவிக்குக் காரணம் வினை. "வினைப் போகமே யொரு தேகங்கண்டாய் வினைதா னொழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்" என்பது ஆப்தர் வாக்கியம். அவ்வினை, இச்சை, அதாவது பற்று காரணமாயுண்டாவது. அப்பற்று, புறமாகிய செல்வத்தையும், அகமாகிய உடம்பையும் பற்றியது. ஆகையால் இச்சையொழித்து நிராசையுற்றால் பிறவி நீங்கும். இது பற்றியே 'நிராசையின்றேல் தெய்வமுண்டோ' என்றார் தாயுமானார். மனம் பொறிகளின் வழியாகச் செல்வதினாலேயே இச்சையுண்டாகின்றது. அது நின்றால் இச்சையறும். அஃதறவே பிறவியற்று மோக்ஷ பிராப்தியுண்டாகும் எனக் கூறவேண்டுவதில்லை. உண்டி சுருக்குதலே ஐம்பொறி யடக்கும் மார்க்கம். அன்னமொடுங்கினால் ஐந்து மொடுங்குமன்றோ? தவமெனப்படுவதும் இதுவே. செல்வாபேட்சை முதலிய புறப்பற்றுகளுண்டாவது சரீராபிமானமாகிய அகப்பற்றினிமித்தமே யாகலின் அவ்வகப்பற்றை விட்டுப் பிறவியை விரும்பாமைக்கு அறிகுறியே சரீரத்தை வாட்டுதலாம். முள்ளைக் கொண்டே முள்ளை வாங்க வேண்டியதுபோல சரீரத்தைக் கொண்டே பிறவி போக்க வேண்டி யிருத்தலின் அச்சரீரம் அழியாதிருக்கவே சிறிது ஆகாரம் கொள்ள வேண்டுமென்பது நுற்றுணிபு.

'கனியேனும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்களே னும்
கனல்வாதை வந்தெய்தின் அள்ளிப்புசித்து' என

நமது சுவாமிகள் திருவாய் மலர்ந்ததும் இது கருதியே.

அப்போதைக்கப்போது சிறிது சிறிதாக இயற்றிவரும் இவ்வுபவாச அப்யாச முதிர்ச்சியால் காலக்ரமத்தில் நன்னிலை வந்தெய்துதல் எளிதாகுமன்றோ?

இனி, கடைசியாக உபவாச மென்பதன் இரகசியார்த்தத்தைக் கூறி இவ்வியாசத்தை இனிது முடிப்பாம்.

உபவாசம் என்பதற்கு, இரண்டு பொருள்கள் ஒன்றாக வசிப்பது என்பது பொருள். இதன் பரியாய நாமங்களாகிய 'ஒரு சந்தி' 'ஒரு பொழுது' என்பவைகளும் இப்பொருள் படுதலை யுணர்க. ஜீவாத்ம பரமாத்துமாக்களுடைய சமீப வாசமே உபவாசம். இதுவே வேதாந்தமாகிய உபநிஷத்துக்களின் கொள்கை. 'பார்க்கு மிடமெங்குமொரு நீக்கமற நிறைகின்ற' பரமாத்வாகிய பகவானை 'மலர்மிசை யேகினான்' எனச் செந்நாப்போதார் கூறியவாறு அமைந்த-ஹ்ருதயகமல வாசனை-மனத்தைப் பொறிகளின் வழியாகப் போகவொட்டாது அடக்கி, நமக்குள்ளே யாராய்ந்து கண்டு தெரிசித்து ஜீவாத்மாவை ஒன்றுபட்டிருக்கச் செய்தலே உபவாசமாகும். இதுவே சிறப்புடைத்து; ஜீவன் முக்த பதவியை யளிப்பது ; பிர்ம்ம வித்தையும் இதுவே. இதை ஆசிரியன் துவாரா அறிந்து அப்பியசித்த லவசியம். ஆனல் இதுவும் முற்கூறிய விரதங்களை யனுஷ்டித்துப் பிர்ம்ம ஞானம் கைவந்தவர்களுக்கே எளிதா மாகலின் அவ்விரதங்கள் இதற்கு ஓர் சோபானமாகும்.

அறிந்தோ அறியாமலோ இவ்வுபவாசத்தின் முதற்படியைக் கடைப்பிடிப்போர் எப்படியும் மேற்படியை அடைவது திண்ணம். இவ்வித இரகசியத்தை உள்ளமைத்தே நமது ஆன்றோர் இவ்வுபவாசங்களை நியமித்தனர். இவ்வுண்மையை யுய்த்துணர்ந்து தேகத்தை வாட்டுதலால் பயன் யாது எனப் போலி வேதாந்தம் பேசிக்கொண்டு திரிவோர் திரிசங்கு ஸ்வர்க்க வாசிகளே யாவர். தற்கால நாகரிகத்தால் மறைக்கப்பட்டு, உண்மை யறியாது, நம்மவர் கொள்கைகளைப் புறக்கணித்துத் திரியும் சகோதரர்களுக்குச் சச்சிதாநந்தப் பரம்பொருள் மெய்ஞ்ஞான மருளுவாராக.

பூ. ஸ்ரீநிவாசன்.
தமிழ்ப் பண்டிதர், இராணிப்பேட்டை.

---

## குரு வணக்கம்.

கு+ரு=குரு. கு=இருள். ரு=நீக்கம் அல்லது ஒளி. ஆதலால் அஞ்ஞானமாகிய இருளை நீக்கி ஞானமாகிய ஒளியைத் தருபவரே "குரு" ஆவர்.

குருவகை:—மூவகைப்படும். "வித்தியா குரு" "கிரியா குரு," "ஞான குரு" என்பவர்: 'அரசன், வாத்தியான்,' தாய், தந்தை, தம்மேம்பட்டவர், இவ்வைவரும் வித்தியாகுருவைச்சேர்ந்தவர்.

வித்தியாகுரு:—இவர் மூவகைப்படுவர் (1) நூலாசிரியர், (2) உரையாசிரியர், (3) போதகாசிரியர்.

(1) நூலாசிரியர்:—இவர் நூல்களை இயற்றுபவர்.

(2) உரையாசிரியர்:—அந்நூல்களுக்கு உரை எழுதுபவர்.

(3) போதகாசிரியர்:—அந்நூல்களையும், உரைகளையும் ஐயமின்றி மாணுக்கர்களுக்குப் போதிப்பவர்.

கிரியாகுரு:—குலகுருவெனினும் கிரியாகுருவெனினும் இவ்விரண்டும் ஒன்றே. இவர் சுபாசுபக்ரியைகளையும் தீக்ஷா கிரமத்தால் சமயப் பிரவேசமுஞ் செய்விப்பவர். கர்மாநுஷ்டானங்களால் ஒருவனுக்குப் பற்றுவிடலும் பற்றுவிடலால் ஞானமும் கைகூடுகின்றன. ஆதலால் ஞானத்தையடைய, கருமத்தைச் செய்தற்கு அதிகாரியாகச் செய்வதே சமயப்பிரவேசஞ் செய்விப்பது. இங்ஙனம் செய்பவர்தாம் குலகுருவாவர். இவர்களுள் அந்தணர் எல்லா வர்ணத்தார்களுக்கும், அரசர் அந்தணரற்ற மற்றைய ஏனையவர்க்கும், வணிகர், அரசர், அந்தணரற்ற எல்லா வர்ணத்தார்களுக்கும், சூத்திரர்—சூத்திரர் சங்கரஜாதியார்களுக்கும் குலகுருவாவர்.

ஞானகுரு:—இவர் இருவகைப்படுவர் (1) அதிட்டிதகுரு, (2) ஆவேச குரு. இவர்களுக்கு மேற்கூறிய ஜாதிவரம்பு கிடையாது.

(1) அதிட்டிதகுரு:—இவரும் இருவகைப்படுவர்:(1)சமயகுரு,(2)சந்தானகுரு.

(1) சமயகுரு:—உலகத்தில் மதத்துக்கு ஆபத்துவருங் காலத்தில் அதனைக் கடவுளருளால் ஆதரித்துப் பல அற்புதங்களைச் செய்துகாட்டிப் பொய்ச்சமயத்தை விலக்கி மெய்ச்சமயத்தை யெடுத்துக் காட்டி உலகத்தை உய்விப்பவர். இவ்வகுப்பினரே ஸ்ரீ ஞானசம்பந்தர், ஸ்ரீ திருநாவுக்கரசர், ஸ்ரீசுந்தரமூர்த்தி, ஸ்ரீமாணிக்கவாசகர் என்பவர்கள்.

சந்தானகுரு:—இறைவனருளால் உலகத்தில் ஞானோபதேசம் செய்து மனிதரை உய்விப்பதற்காகப் பரம்பரையாக வருபவர்.

வரலாறு:—ஆதியில் அருள் வடிவமாய்த் திருக்கைலாய மலையி லெழுந்தருளிய பரமசிவன்பால் ஞானோபதேசம் பெற்றவர் "திருநந்தித்தேவர்"; அவர்பால் சனற்குமாரமுனிவரும், அவர்பால் சத்தியஞானதரிசிகளும், அவர்பால் பரஞ்சோதி முனிவரும் முறையே சித்தாந்த ஞானோபதேசம் பெற்றனர். இவர்கள் அகச்சந்தான குருக்களெனப்படுவர். பரஞ்சோதி முனிவர் தமிழுலகஞ்செய்த மாதவப் பேற்றால் திருவெண்ணெய் நல்லூரையடைந்து மெய்கண்ட தேவருக்கு உபதேசிக்க அவர் அருணந்தி சிவாசாரியார்க்கும், அவர் மறைஞான சம்பந்தருக்கும், அவர் உமாபதி சிவாசாரியாருக்கும் உபதேசித்தருளினர். இவர்கள் புறச்சந்தான குருக்கள் எனப்படுவர். முறையே சந்தானகுரு பரம்பரையாகும். நவகோடி சித்தபுரம் என்னும் திருவாவடுதுறை ஆதீன முதலியன சந்தான குருபரம்பரையாம். இவ்வாறு வழி வழியாகவரும் ஆசிரியர்களிடம் ஞானோபதேசம் பெற்று மோக்ஷமடைந்தவர் பலர்.

ஆவேசகுரு:—பக்குவான்மாக்களை ஆட்கொள்ளவேண்டிக் கடவுளே ஆசிரியராக வந்து மெய்ப்பொருளை விளக்கி ஆட்கொள்ளும் அருள் வடிவ மூர்த்தியே. ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகளை ஆட்கொள்ளக் கருதித் திருப்பெருந்துறையிலே குருந்தமரத்தின் அடியிலே எழுந்தருளியவர் ஆவேச குருவேயாவர்.

அடையும்முறை:—அதிகநாளாய்ச் சாப்பிடாத ஒருவன் எங்ஙனம்"பசி" "பசி" என்று பறந்துகொண்டு ஆஹாரத்தைத் தேடுவானோ அங்ஙனமே ஞானம் என்னும் ஆஹாரத்தைத் தேடக் குரு என்னும் சத்திரம் எங்கிருக்கிறது என்று தேடிக்கொண்டே செல்லவேண்டும். அங்ஙனமே "கன்றைத் தேடிக் கசிந்துவரும் கற்றாவைப்" போல குருவும் வந்து சேர்வார்.

"கள்ளக் காதலனிடத்தன்பு கலந்துறைத் தொழுகும்
உள்ளக் காரிகை மடந்தைபோல"

என்றபடி உண்மைச் சீடர்கள் குருநாட்டங் கொண்டு எக்கஷ்டம் அடைந்தாலும் அல்லது எத்தொழில் செய்தாலும் குருவை அடையும் நாள் எப்பொழுதுவருமோ, நேருமோ என்று ஏக்கங்கொண்டவர்களாகவே யிருப்பார்கள். உள்ளவாறு மெய்யன்புடன் தேடுகின்ற நன் மாணுக்கர்களைத் தேடிவந்து அருள் செய்து ஆட்கொள்வது இப்பரமகுருவின் தன்மையாம்.

தக்ஷிணையும்செயலும்:—இங்ஙனம் உய்யக்கொள்ளும் குருவிற்குத் தக்ஷிணை உடல், பொருள், ஆவி என்பவைகளாம்; இவற்றை,

" அன்றே யென்றன் ஆவியுமுடலு முடைமை யெல்லாம்
குன்றே யனையா யென்னையாட் கொண்டபோதே கொண்டிலையோ"

" தந்ததுன் றன்னைக்கொண்ட தென் றன்னைச்
சங்கராயார் கோலோ சதுரர்"

" வஞ்சவினைக் கொள்கலமா முடலைத்திவாய்
மடுக்கிலேன் வரையுருண்டு மாய்ப்பே னல்லேன்
நஞ்சொழுகு வாளாலுங் குறைப்பே னல்லேன்
நாதனேயிதுவு நினதுடைமை யென்றே அஞ்சினேன்"

என்பதால் காண்க.

ஞானகுரு நினைத்தலாலும், பரிசித்தலாலும், பார்வையாலும் ஆன்மாக்களை சிவமாகச் செய்வது அவர் தன்மை யென்பர்.

அஃதாவது:—நினைத்தலால் பக்குவான்மாக்கள் சிவமாகும்; பரிசித்துப் பக்குவான்மாக்களைத் தம்மைப் போலாக்குவர்; அருட்பார்வையால் பக்குவான் மாக்கள் சிவமாந்தன்மை யெய்தச்செய்வர்.

பெருமையும் முடிவும்:—"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்று நாம் நம் சிறுவயதிலேயே கற்றிருக்கிறோம். குருவேறு கடவுள் வேறு எனக் கருதலாகாது. "குருவே சிவம்" கடவுளுக்கு நாம் ஒரு அபராதஞ் செய்துவிட்டால் அதைத்தீர்க்கப் பரிகாரஞ்செய்வார் குரு. குருவுக்கு அபராதஞ் செய்தால் குருவே அதைத் தீர்க்கவேண்டும். குருவில்லாத வித்தைபயனற்றதென்பது நம்மவர்கொள்கை. இந்திரன் தன் குலகுருவாகிய "வியாழபகவானை" க்கண்டு வணங்காது பராமுகமாக இருந்ததால் என்ன என்ன

துன்பங்களையெல்லாம் அடைந்தான். ஆனால் மேல்நாட்டுநாகரீகம் அதிகரிக்கவே நம்மவர் (Modern Civilization Spectacles, Western Civilization Loosing Education) "குரு என்னடா, இரண்டுலெட்டர் குவாம் ருவாம், எதோ சம்பளத்தை வாங்கிக் குரூன் ரெண்டு கடமுடனு சொல்லிட்டு பேட்ரான், அவனும் சம்பளம் வாங்கரப்பயல்தானே" என்கிறார்கள். அந்தோ! என்ன கொடுமையிது தம்மனம் சகிக்கிறதா.

"எழுத்தறி வித்தவன் இறைவனாகும்" என்றதை இனிமேலாவது நம் சகோதரர்கள் அறிந்துகொண்டு குருவை வையாமலும், அலக்ஷியஞ் செய்யாமலு மிருந்து சுகமாக வாழ்வார்களாக. இறைவன் அருள்புரிக.

"கல்லாலின் புடையமர்ந்து நான்மறையா றங்கமுதற் கற்றகல்வி
வல்லார்க ணால்வருக்கும் வாக்கிறந்த பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமா யல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாம னினைந்துபவத் தொடக்கை
வெல்வாம்."

"அருட்குழக னெழிற்கயிலை முழுக்காவ னந்திபிரா னடிகள் போற்றி
தெருட்சிபெறு மனக்கமல சநற்குமர முநிவனிரு திருத்தாள்போற்றி
இருட்டுமலத் தகல்சத்ய ஞானதரி சனிசரண விளைகள் போற்றி
மருட்சியறு பரஞ்சோதி யருள்சிவ குருபரன்கான் மலர்கள் போற்றி.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பா. பஞ்சாபகேசன், மாயவரம்.

---

## கைவல்ய நவநீத வசனம்

(298-ம் பக்கத் தொடர்ச்சி.)

### மனச்சாட்சி.

மனம் என்ற வார்த்தை யாவர்க்கும் தெரிந்ததே யெனினும், அதனுடைய சொரூபத்தை யாவரும் அறிந்திருக்கிறார்களென்று கூறுவதற்கில்லை. சாதாரணமாக மனம் என்பது வேறு நாம் என்பது வேறு என்பதை யறிவது யாவராலும் சுலபமாக ஆகிற காரிய மல்ல.

ஒன்றை நினைக்கிறது மறக்கிறதுமே மனதின் முக்கியமான தொழில். அந்த இரண்டு தொழில்களில் மனதின் சொரூபம் முழுமையும் அடங்கியிருக்கின்றது. காமக்குரோதாதி குணங்கள் அனைத்தும் இடையில் வந்து சேர்ந்தனவே. இந்த மனதின் காரியங்க ளனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கிற சாட்சி யொன்றிருக்கிறது. அதற்கே மனச்சாட்சியென்று பெயர். ஆகையால் மனச்சாட்சி யென்றால் மனமாகிய சாட்சி யென்று அல்வழிச் சந்திப் பண்புத்தொகையில் பொருள் கொள்ளாமல் மனத்தின் சாட்சி அல்லது மனதிற்குச் சாட்சி யென்று வேற்றுமைச்சந்தி 6-ம் வேற்றுமை அல்லது 4-ம் வேற்றுமைத் தொகையில் பொருள் கொள்ளல் வேண்டும்.

ஒருவன் காரியத்தைச் செய்யும்போது உள்ளுக்குள்ளே யிருந்து கொண்டு "அந்தோ இது பாபம்" என்று ஒரு சிந்தனை கிளம்புகிறது. இதுதான் மனச்சாட்சி. தவறான ஒரு காரியத்தைச்செய்யக் கருதும்போது அல்லது செய்யும்போது "இது கெட்ட செய்கை" என்று உள்ளிருந்து ஒருவர் சொல்வதுபோல் தோன்றுகின்றது. இதுவே மனச்சாட்சி. இந்த மனச்சாட்சிக்கு நல்லது கெட்டது, பாபம் புண்ணியம் இவற்றைப் பகுத்தறியும் சக்தியுண்டு. மனதில் வேலைகளனைத்தையும் இதுபார்த்துக் கொண்டிருக்கும். ஆனால் இது சாட்சிமாத்திரமாய்ப் பார்த்துக்கொண் டிருப்பதேயன்றி ஒரு தொழிலையும் செய்வதன்று.

இதுவே அறிவு என்பதும். இச்சாட்சியை யறியாமல் மனம் ஒன்றையும் செய்யமுடியாது. மனம் தன்னிடமுள்ள பொறாமை, வஞ்சனை, சூது, துரோகம் எதையும் இச்சாட்சியினிடமிருந்து மறைத்து வைக்க முடியாது.

இச்சாட்சியே மனதிற்கு உயிர் என்றும் கூறலாம். அதாவது இதன் பிரகாசம் மனதில் தாக்கினால் மட்டுமே மனம் தொழில் செய்ய வல்லது. இன்றேல் மனம் ஜடமாதலின் தொழில் செய்யாது. மனம் சத்துவம், இராஜசு, தமசு என்ற முக்குணங்கள் பொருந்தியது. ஆனால் சத்துவமே அதன் இயற்கைக்குணம். அதாவது மனம் சத்துவசொரூபம்; மற்ற குணங் கள் வந்து கலந்தன. அச்சத்துவகுணம் தன்வரையில் பிரிந்து நின்று விட் டால் மற்ற இரண்டு குணங்களும் நில்லா. இச்சத்துவபாகமே சாட்சியாகும்.

சாட்சியைக்கொண்டு மனதைத்தேடினால் மனம் இராது. சாட்சி மறைந்தால்தான் மனம் முளைக்கும். இதனால் மனதின் சத்துவபாகமே சாட்சியென்று தெளிவாக அறியலாம். ஒருவன் தான் செய்யும் ஒவ்வொரு வேலையையும் இச்சாட்சியின் சம்மதத்தைக் கேட்டுச் செய்வானாயின் ஒரு போதும் தவறான காரியத்தையாவது பாபத்தையாவது செய்யமாட்டான். இச்சாட்சியே அறிவின் சொரூபம். இது பரிசுத்தமானது. இதன் உண் மைச் சொரூபத்தை யறிவதே தன்னை யறிவதாகும். எப்படி யெனில் இதுவே ஆன்மாவாகிய தான்.

சாட்சியாகிய இந்நிலையை யொவ்வொருவரும் ஒவ்வொரு சமயத்தில் காண்பதுண்டு. ஆனால் அது மின்னல்போல் ஒருகணம் தோன்றி மறு கணம் மறையக் காண்கிறார்கள். சமயம் வரும்போது "என் மனச் சாட்சிக்கு இந்த விவகாரம் ஒப்பவில்லை" என்றும், "என் மனச்சாட்சியாய்க் கூறுகிறேன்" என்றும் வாயால் மொழிகிறார்களே யன்றி நிலைத்திருக்கக் காண்பதில்லை. ஆகையால் மனச்சாட்சியைக் கவனிக்காமலே மனம்போன படி யெதையும் செய்துவிட்டுக் கெட்டகர்மங்களுக் காளாகிறார்கள். அப் படி யொருசமயம் கவனிப்பதாயினும் ஒரு காரியத்தைச் செய்துவிட்டபின் கவனித்து மனத்தாபப் படுகிறார்கள்.

முமுட்சு ஒருவன்மட்டும் அம்மனச்சாட்சியின் சொரூபத்தை யறிய முயன்று, அதுவே தான் என்றறிந்து அதேநிலையில் சாட்சிமாத்திரமாக நின்று விடுகிறான். அந்த நிலையில் மனதின் உருவமில்லை. சத்துவகுண மாத்திரமாய்ச் சேதித்துள்ள அருவமனமே கனவுபோல விவகாராதிகளைச் செய்யும் சாட்சிமாத்திரமா யிருப்பதால் கருமங்கள் பற்றாது. சாட்சிபோல் எனில் தான் இருக்கும் தேகத்தின் செயல்கள் முதல் யாவும் தனக்கன்னியமாகவும், நடக்கும் எல்லா விவகாரங்களுக்கும்தான் சாட்சிமாத்திரமாய் இருப்பதன்றித் தனக்கு எவற்றிலும் ஒரு சம்பந்தமு மில்லையென்றும் தான் ஒரு தொழிலையும் செய்யாமல் யாவற்றையும் நோக்கிக்கொண்டுமட்டும் இருப்பதாகவும் இதே தனது இயற்கைச் சுபாவமாகிய நிலைமையென்றும் பிரத்யக்ஷானுபவமாகப் புலப்படும்.

இந்த நிலையில் திரிபுடியுண்டு. அதாவது காண்பான், காட்சி, காட்சிப் பொருள் (The Knower, The Known and the Knowledge) என்ற மூன்று முண்டு. இதற்குமேலான நிலைமையே அத்துவிதா னந்தத்தை யளிக்கும் இரண்டற்ற பரிபூரண சாக்ஷாத்காரமாகிய நிலையாம். நாம் இங்கு சாட்சியாகிய நிலையைப் பற்றிமட்டுமே கூறமுயன்றதால் அம்மட்டோடு நிறுத்துகிறோம்.

ஒவ்வொருவரும் நம்மால் கூடியவரையில் இம்மனச்சாட்சியின் சொரூபத்தை யறிய முயல்வதோடு நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் மனச்சாட்சியின் சம்மதம் பெற்றுச் செய்யப் பழகவேண்டும். இப்பழக்கத்தால் படிப்படியாய் மனச்சாட்சி யுண்டாவதை யனுபவத்தில் காணலாம். எல்லாம் வல்ல பரம்பொருள் அருள்புரியப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் தத் ஸத்.

சீடன்.

---

## காலப் பிரமாணம்.

உலகின்கணுள்ள சகல சாதியார்களும், தங்கள் தங்கள் மார்க்க கருமங்களையும் லௌகிக கருமங்களையும் ஒழுங்கே கொள்ளும் பொருட்டு, காலத்தைப் பலவிதமாகப் பாகித்துக் கொண்டார்கள். சௌரமான நாளும் வருடமும், சாந்திரமான மாதமும் வருடமும் ஆகிய இவைகளே இயற்கையாற் பெறப்படுங் (அதாவது எங்கட்குக் கடவுளா லளிக்கப்பட்ட) காலப் பகுதிகளாம். மற்றைய மணித்தியாலம், நாழிகை முதலியனவும், நாட்களின் தொகுதிகளாகிய வாரங்களும் மாதங்களும், வருடங்களின் தொகுதிகளாகிய வட்டங்களும், பிறவும் செயற்கையி லுண்டாகிய (அதாவது மனிதர்களாற் பாகிக்கப்பட்ட) பகுதிகளென்றே யூகிக்க வேண்டி யிருக்கிறது. இக்காலப் பகுதிகளை ஊன்றி யாலோசிக்கு மிடத்து, வானசாஸ்திர அறிவென்பது கிஞ்சித்து மில்லாத அதி பூர்வகாலத்தில், மனிதர்கள் இராப்பகல் என்னும் இருபகுதிகளையு முடைய நாள் ஒன்றைக் கோண்டே 1-ம்

நாள், 2-ம் நாள், 50-ம் நாள், 100-ம் நாள் என எண்ணுக் கணக்கிட்டிருப் பார்க ளென்றும், பின்பு அறிவு விரிய விரிய நேரத்தையும், வாரத்தையும், மாதத்தையும், தேதியையும், பக்ஷத்தையும், திதியையும், நக்ஷத்திரத்தை யும், ருதுவையும், வருடத்தையும், வட்டம் முதலியன வற்றையும் பிறப் பித்துக் கொண்டார்க ளென்றும் விளங்கக் கிடக்கின்றது.

பூர்வத்தில் சூரியமானத்தைக் கணக்கிடுத லரிதாயிருந்தமையினாலும், சந்திரன் நாள்வீதம் பிறைவடிவாய் வளர்ந்து பூரணையாகியும், பின் பிறை வடிவாய்த் தேய்ந்து அமாவாசியாகியும் வரும் சம்பவத்தை) (உத்தேசப்படி கணக்கிடுத லெளிதா யிருந்தமையினாலும், அப்பிறை வடிவங்களையே தேதி களாகவும், பெரும்பாலும் அமாவாசியையே மாசாந்த மாகவுங் கொண்டு சாந்திரமான மாதம் வருடங்களையே கணக்கிடுவா ராயினர்.

இந்தியர், மகமதியர், சீனர், யூதர் முதலிய சாதியார்கள் இக்காலத் திலும் சாந்திரமானத்தைக் கொள்கின்றார்க ளாதலினாலும், ஆங்கிலத்தில் Month மாசம் என்பது Moon சந்திரன் என்னும் பதத்திலிருந்தே பிறந்த மையாலும், சந்திர னுக்கும், மாசத்துக்கும் தமிழில் திங்களெனவும், சீனத் தில் சிவி எனவும் பொதுப் பெயரிருத்தலினாலும், தற்காலத்தில் தமிழில் வழங்கப்படும் மாசப்பெயர்களெல்லாம் பௌரணைக்குப் பௌரணைசந்திரன் எந்த நக்ஷத்திரத்தோடு கூடுகின்றானோ அந்த நக்ஷத்திரத்தின் பெயரால் அழைக்கப்படும் பெயர்களா யிருத்தலினாலும், உலகின்கணுள்ள பூர்வீக சாதியார் சகலராலும் அன்று தொட்டுச் சாந்திரமானமே கொள்ளப்படு கின்ற தென்பது நன்கு புலப்படுகின்றது.

இனி, இக்காலத்தில் சாந்திரமானம் சௌரமானம் என்னு மிரண்டி னையும் பலருங் கொள்கின்றார்கள். லௌகீக விஷயத்துக்குச் சௌரமான த்தையும், வைதிக விஷயத்துக்குச் சாந்திரமானத்தையும் பெரும்பான்மை கொள்வாராயினர்.

சூரியன் 12 இராசிகளையும் (360 பாகையையும்) சுற்றிவருங் காலம் சௌரமான வருடமெனவும், சுக்கிலபக்ஷப் பிரதமை முதல் அமாவாசியந் தம் வரையுள்ள காலம் சாந்திரமானமாசம் எனவும், இப்படி 12 அமாவாசி கொண்டகாலம் சாந்திரமான வருடம் எனவும் பெயர்பெறும். சுமார் 365 நாளும் 6 மணித்தியாலமும் 9 மினிட்டும் 9 செக்கனும் கொண்டது ஓர் சௌரமான வருடம்; சுமார் 29 நாளும் 12 மணித்தியாலமும் 44 மினிட் டுங் கொண்டது ஓர் சாந்திரமான மாசம்; சில வருஷங்களில் 13 சாந்திர மான மாசங்களும் வரும். இரண்டு அமாவாசைவரும் சௌரமான மாசத் தில், சாந்திரமான அதிகமாசங் கொள்ளப்படும்.

நாள். நாட்பிறப்பு, மாசப் பிறப்பு, வருடப்பிறப்பு முதலியனவற்றைக் கொள்ளு முறையிற் பலசாதியாரும் பலவிதமா யிருப்பினும், நாளை 24 பாகமாகப் (ஏறக்குறையச் சகலசாதியாரும்) பிரித்துக்கொண்ட சூட்சுமாத்

திரம் வியக்கத் தக்கதே. ஒரு நாளின் (24 மணித்தியாலத்தின்) ஒரு பங்காகியஒருமணித்தியாலம், ஆங்கிலத்தில் ஔவர்எனவும்,லத்தீனிலில் ஹௌரா எனவும், வடமொழியில் ஹோரா எனவும், தமிழில் ஓரை எனவும் வழங்கப் படுகின்றது. (ஒரு ஓரை $2\frac{1}{2}$ நாழிகை)

ஆங்கிலேயர் முதலிய மேலைத்தேசத்தார் 60 செக்கன் கொண்டது ஒரு மினிட்டாகவும், 60 மினிட் கொண்டது ஒரு மணித்தியால மாகவும், 24 மணித்தியாலங் கொண்டது ஒரு நாளாகவும் வகுப்பர். சீனர் முதலிய மங்கோலியர் 100 செக்கன் கொண்டது ஒரு மினிட்டாகவும், 100 மினிட் கொண்டது ஒரு ஙீயாகவும், 100 ஙீ கொண்டது ஒருநாளாகவும் வகுப்பர். (ஐரோப்பிய கணக்குப் பிரகாரம் ஒரு மினிட்டுக்கு 0.0695 ஙீயாகும்) மங்கோலியரின் இவ்வித வகுப்பானது 17-ம் நூற்றாண்டு வரையுமே நிலைபெற்றது. பின்பு கணிதவல்லரும் கணிதசாஸ்திர சபையின் அத்தியட்சருமாகிய "செஸ்யூட்ஜால்" என்பவரின் சொற்படி ஐரோப்பியரின் வகுப்பே (அத்தேசங்களில்) கொள்ளப் படலாயிற்று.

இந்தியர் $2/5 = 0.4$ செக்கனுக்குச் சரியான 60 விதற்பரை கொண்டது ஒரு தற்பரையாகவும், 60 தற்பரை கொண்டது ஒரு விநாடியாகவும், 60 விநாடி கொண்டது ஒரு நாடியாகவும், 60 நாடிகொண்டது ஒரு நாளாகவும் வகுப்பர். இன்னும் நிமிஷம் 15 கொண்டது ஒரு காஷ்டை எனவும், காஷ்டை முப்பது கொண்டது ஒரு கலை எனவும், கலைமுப்பது கொண்டது ஒரு முகூர்த்தம் எனவும், முகூர்த்தம் 30 கொண்டது ஒரு நாள் எனவும் ஒரு வாய்பாடும், 6 பிராணன் கொண்டது ஓர் பலை எனவும் 60 பலை கொண்டது ஓர் கடிகை எனவும் கடிகை $2\frac{1}{2}$ கொண்டது ஓர் ஓரை எனவும், ஓரை 24 கொண்டது ஓர் நாள் எனவும் மற்றோர் வாய்பாடும் இந்துக்களுள் (பெரும்பான்மை தமிழர்களுள்) வழங்கப்படுகின்றது.

இந்துக்களால் நாளுக்குமேலே கொள்ளப்படும் பிரிவுகளான:—7நாட் கொண்டது ஒரு வாரம்; 15 நாட்கொண்டது ஒரு பக்ஷம்; பக்ஷமிரண்டு கொண்டது ஒரு மாசம்; $365\frac{1}{4}$ நாட்கொண்டது ஓர் சௌரமான வருடம்; சௌரமான மாசம் 2 கொண்டது ஓர் ருது; ருது 3 கொண்டது ஓர் அயனம்; ருது 6 கொண்டது ஓர் வருடமுமாம். இவற்றுள் ருதுக்களாவன:— சித்திரை வைகாசி வசந்தருது=இளவேனில்; ஆனி ஆடி கிருஷ்மருது— முதுவேனில்; ஆவணி புரட்டாசி வருஷருது=கார்; ஐப்பசி கார்த்திகை சாருது—கூதிர்; மார்கழி தை ஹேமந்த ருது—முன்பனி; மாசி பங்குனி சிசிருது—பின்பனி முதலியவைகளாம். ஐரோப்பியரின் கொள்கைப்படி ருது நான்காகும். அவையாவன:—வசந்த காலம், கோடைகாலம், கார்காலம், மழைக்காலம் என்பவைகளாம்.

அயனம் உத்தராயணம் தெக்ஷிணயனம் என இருவகைத்து. சூரியன் மகராயனத்திற் * பிரவேச முதல் கடகாயனப் பிரவேசம் வரையுமுள்ள

காலம் உத்தராயணம் எனவும், கடகாயனப் பிரவேசம் முதல் மகராயனப் பிரவேசம் வரையுமுள்ள காலம் தக்ஷிணயனமெனவும் பெயர் பெறும். தேவர்கட்கு உத்தராயணம் பகலும் தக்ஷிணயனம் இரவுமாம். மனுஷ வருடம் 360 கொண்டது ஓர் தேவ வருடம். தேவ வருடம் 12000 கொண்டது ஓர் சதுர்யுகம்.

சதுர் யுகங்களாவன:—

| யுகம். | தேவவருஷம் | மனுஷவருஷம் |
|---|---|---|
| கிருதயுகம். | 4800 | 1,728000 |
| திரேதாயுகம். | 3600 | 1,296000 |
| துவாபரயுகம். | 2400 | 864000 |
| கலியுகம். | 1200 | 432000 |
| சதுர்யுகம். | 12000 | 4,320,000 |

இங்கு ஒவ்வொரு யுகத்துக்கும் தேவவருடமாகக் காட்டிய தொகைகளின் 4-ம் தானத்தி லிருப்பனவாகிய 4. 3. 2. 1 என்னும் எண்களையே பௌராணிகர் அவ்வவ்யுகங்களில் நடைபெறும் தர்மத்தின் கால்களென்பர்.

இனி, ஒரு சதுர்யுகம் ஒரு தேவயுகமாம். 71 தேவயுகம் அதாவது 306, 720, 000 சௌரமான வருஷம் ஒரு மன்வந்தரமாம். இந்திராயுக்காலமும் அவ்வளவினதே. ஆயிரந் தேவயுகம் அதாவது 4,320, 000,000 சௌரமான வருஷம் கொண்டது ஒரு கல்பமாம். இது ஓர் பிரமப்பகலாம். ஒரு பிரமப்பகலிலே பதினாலு மன்வந்தரங்களுள. ஆறு தேவயுகஞ் சேடமாம். பின்னும் ஆயிரந்தேவயுகந்திரும்பினாற், பிரமனுக்கு ஒரு இராத்திரியாம். ஆகவே இரண்டாயிரந் தேவயுகம் ஒரு பிரமதினமாம். முந்நூற்றறுபது பிரமதினம் ஒரு பிரமவருடமாம். நூறு பிரமவருடம் பிரமாயுக்காலமாம். பிரமாயுக்காலம் இரண்டுகூடினால், விட்டுணு தினமாம். விட்டுணு தினம் முந்நூற்றறுபது கூடினால் விட்டுணு வருஷமாம். விட்டுணுவருஷம் நூறுகூடின், விட்டுணு வாயுக்காலமாம். விட்டுணு வாயுக்காலம் இரண்டு கூடின், உருத்திர தினமாம். உருத்திரதினம் முந்நூற்றறுபது கூடின், உருத்திர வருஷமாம். உருத்திர வருஷம் பரார்த்தங் கூடின், உருத்திராயுக்காலமாம். உருத்திராயுக்காலம் இரண்டு கூடின் ஈசுவரதினமாம். ஈசுவரதினம் முந்நூற்றறுபது கூடின், ஈசுவர வருஷமாம். ஈசுவரவருஷம் பரார்த்தங் கூடின், ஈசுவராயுக் காலமாம். ஈசுவராயுக்காலம் இரண்டு கூடிற் சதாசிவதினமாம். சதாசிவதினம் முந்நூற்றறுபது கூடிச் சதாசிவவருஷமாம்.

* தைமுதல் 6 மாசம் உத்தராயணம் என்னுங் கொள்கை முன்னோர் காலத்துச் சரியாம்? தற்காலத்தில் இக்கொள்கை ஆட்சேபமுடைத்து.

'இற்றைக்கு 5000 வருடங்கட்கு முன் பூமி சிருட்டிக்கப்பட்டது' எனக்கூறும் மேலைத் தேயத்தாரின் கொள்கையை அனுசரிப்போர் இக் கொள்கையை (Miths) கட்டுக்கதைக் கொள்கை எனக் கூறுவர். புரொபெசர் பிக்கறிங்லாட் கெல்வின் சேர் நோமன் லொக்கிர் முதலிய மேலைத் தேய சாஸ்திர விற்பன்னர்கள் பூமியின் உற்பத்திக் காலத்தையும் நாசகாலத்தையும் பற்றிக்கூறப்புகுந்து ஈற்றில் முடிவுரை கூறாது தியக்கமுற்றனர்.

எத்தனையோ ஐயாயிரம் வருடங்கட்கு முன் பூமி உற்பத்தியானது என்பது இவர்களின் கொள்கை. சூரிய சித்தாந்தப்படி சிருஷ்டியாதிஞல 1955885023 அபிஜித்து நக்ஷத்திரத்துக் கடுக்க இருப்பதும் க்ஷயமடைந்து ஒளிகுன்றி வருவதுமான ஓர் பிரமாண்ட வஸ்துவானது, ரவிசமஸ்தானத்தை (Solar system) நோக்கி வருகின்றது. இது பூமியைத்தாக்கச் சுமார் 430000 வருடங்கள் செல்லும் எனவுங் கூறுகின்றார்கள். இக்கால முடிவானது இக் கலியுகாந்த சந்தியா யிருப்பதாலும், யுக சந்திகளிற் பிரளயம் முதலியன வுண்டாகும் என இந்தியர்களின் சாஸ்திர சம்மதமாயிருத்தலினாலும் மேற்கண்ட கூற்று உண்மையா யிருப்பினு மிருக்கும்.

இனி, இந்தியரும், கிரேக்கரும், வேறுஞ் சிலரும் சூரியோதயத்தையும்; இத்தாலியரும், பொஹிமியரும், வேறுஞ்சிலரும் சூரியாஸ்தமனத்தையும், ஆங்கிலேயர் அர்த்தராத்திரியையும் நாட்பிறப்பாகக் கொள்ளுவர். ஆங்கிலேயர் இரவு பன்னிரண்டு மணிமுதல் பகல் பன்னிரண்டு மணி வரையுமுள்ள காலத்தை அந்த நாளின் (A. M.) முற்பாக நேரமாகவும், பகல் பன்னிரண்டு மணி முதல் இரவு 12 மணி வரையுமுள்ள காலத்தை (P. M.) பிற்பாக நேரமாகவும் கொள்ளுவர். அவர்களுள் வானசாஸ்திரிகள் பகல் 12 மணியையே நாளின் அந்தமும் ஆதியுமாகவைத்து 1 மணி, 2 மணி, 10 மணி, 13 மணி, 19 மணி, 24 மணி என எண்ணி நாளைக் கணக்கிடுவார்கள். ஆனால் இவ்விதக் கொள்கையானது வானசாஸ்திர விஷயத்துக்கு மாத்திரமேயாம். லௌகிக விஷயத்துக்காயின் முற்காட்டிய விதமே கொள்ளுவர். நாளை முற்பாகம் பிற்பாகமாக ஆங்கிலேயர் பிரித்துக் கொண்டவாறே இந்தியரும் சாமமாயும் அன்னமாயும் பிரித்துக் கொண்டார்கள்.

(தொடரும்)

வே. பொன்னையா பிள்ளை,
Port Dickson.

---

## விவசாய முன்னேற்றமும் தனவைசிய சமுகமும்

திருமகட்கு உறைவிடமா யிருப்பது தனவைசிய சமுகமே! பம்பாய்க்குபாரசீகர்களும் பாட்டியாக்களும், வங்காளத்திற்கு மாறுவாரி மரபினர்களும் திருமகளின் கடாக்ஷம் பெற்று வர்த்தக அரசு புரிவதைப் போன்று நம்மரபினர் தென்னாட்டு வைசிய ரெத்தினங்களாய் விளங்கி வருவது ஒருவாறு பேரானந்தத்தை உண்டாக்கினும் இதர மாகாணங்களில் நம்மைப்

போன்று இச்செல்வப் பேர் பெற்றவர்கள் எடுத்திருக்கும் முயற்சியில் ஒரு பகுதிக்காவது நம் குலத்தவர்கள் ஈடுபடாதிருப்பது, பம்பாய், அகமதா பாத், கல்கத்தா, சாக்கி முதலிய நகரங்களில் உள்ளவர்களின் ஆதாவாலும் பெரு முயற்சியாலும் ஆயிரக்கணக்கான குதிரை சக்தியைக் கொண்ட இஞ் சின்களால் நடத்திவரும் தொழில்சாலைகளையும், ஆயிரக்கணக்கான கூலி யாட்களுக்கு விடா வேலையைக் கொடுத்து ரக்ஷிக்கும் பல காப்பித் தோட் டங்களையும், தேயிலைத் தோட்டங்களையும் பார்க்கப்புலனுகும். அநேக சமுத் திரங்களைத் தாண்டி, கொண்டு விலை செய்து லாபகரத்துடன் திரும்பி வருகிற நமக்கு தைரியமும், ஊக்கமும், விடாமுயற்சியும் போதிய அளவுக்கு மேல் எஞ்சியே நிற்கிறதென்று சாதிக்கவும் தகும். செல்வம், ஊக்கம், தைரியம் முதலிய இன்றியமையாதவைகளையுமுடைத்தா யிருக்கும் பாக்கி யத்தைப் பெற்ற நாம், நம்மைப் போன்றுள்ள மற்ற மாகாணத்திய தன வைசியரடையும் லாபம் மதிப்பு பேர் முதலியவைகளை அடையாதிருப்பதின் காரணந்தா னென்ன? நம் மிடத்திலிருக்கும் உறுதியும் பிடிவாதமும் அநேக விதங்களில் நமக்கு நன்மையே பயக்கினும், ஒரு தொழிலிலேயே பெரும்பான்மையாக, நாம் தலையிட்டுக் கொண்டு அதைமாத்திரம் நடத்து வதே நம் மரபினர் எல்லாவழிகளிலும் முன்னேற்ற மடைந்து மேற்கே பாரசிகர்கள் விளங்குவதைப்போல் இத் தென்னிந்தியாவிற்கு குன்றின் மேல் வைத்த ஒரு பெருவிளக்கைப்போல் பிரகாசிக்கா திருப்பதற்கு முக்கிய காரணமாகும்.

எல்லோரும் ஒரேவகைத் தொழிலி லீடுபட்டு நடந்து வருவதால் வரவேண்டியலாபம் குறைந்து போட்டி அதிக மேற்படுவது ஒருபுறமிருக்க, இத்தகைய சந்தர்ப்பத்தில் எத்தகைய லாபமுள்ள தொழிலின் நற்குணங்க ளும் நலிவு கொள்ளும். இதிலிருந்து நான் வட்டித்தொழிலைக் குறைகூறு கின்றே னென்று நினைவுகொள்ளா திருக்குமாறு எனது சமூகத்தாரைத் தாழ்வுடன் வேண்டுகின்றேன். எத்தகைய மகத்தான தொழிலா யிருப்பி னும் அநேகர் அளவுக்கு மிஞ்சி ஒரேதுறையில் இறங்குங்கால் அத்தொழில் ஒரு சவுதக்குறியையே காண்பிக்கும் என்பது எனது துணிபு. இதிலும் இச்சந்தர்ப்பத்தில் இத்தொழிலி லடைந்துவரும் சீர்கேட்டை ஆயிரம் நாப் படைத்த ஆதிசேடனாலும் விரித்துரைக்க முடியாது.

இனி நம்மில் பெரும்பான்மையோர் வேறு லாபமுள்ள தொழில் ஆரம்பிக்க வேண்டிய சந்தர்ப்பம் வந்துவிட்டது. நம்முன்னே பல நூறு தொழில்கள் காணப்படினும் இவைகளை ஒன்றன்பின் ஒன்ருகச் சீர்தூக்கிப் பார்க்கப் புகின் விவசாயமே முக்கியமாக ஆதரிக்கப்பட வேண்டிய முழு முதல் தொழிலாக முன்னிற்கிறது. ஜீவகாருண்யத்திற் காகட்டும் லாபகாத் திற் காகட்டும் கமகத்தொழிலே முதன்மையாக வீற்றிருக்கின்றது. நூற் றுக்கு எழுபத்தாறு நபர்கள் செய்யும் தொழில் விவசாயமே? இத்தேசத்து

ஜனங்களில் பெரும் பான்மையோர் பல ஆயிரம் வருடங்களாக ஆண்டு அநுபவித்து வரும் ஒருதொழில் லாபத்தைக் கொடுக்காத தொழிலென்று கருதமுடியுமா? அல்லது இத்தொழிலைக் கைக்கொள்ளுவதனல் கௌரவக் குறைவு ஏற்படக் காரண முண்டா ? அல்லது நாம் தொன்று தொட்டு நடத்திவரும் தொழிலைக் காட்டிலும் சிரமமும் உழைப்பும், இதற்கு அதிகம் வேண்டுமா ? அல்லது வட்டித் தொழிலைவிடப் பணம் அதிகமாய்த் தேவை யுண்டா ?

" உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம், தொழுதுண்டு பின் செல்பவர் " என்றும் " தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது " என்றும் வழங்கும் பெரியார் பொன்வாக்குப் பொய்யாகுமோ. இதனுலே மதிப்பும் கௌரவமும் விவசாயத்தையே தழுவிநிற்கின்றனவென்பது புலப் படவில்லையா? " சீரைத்தேடின் ஏரைத்தேடு " என்று வழங்கும் மூதுரையி ஞல் விவசாயம் சரியான நல்ல தொழிலென்று கொள்ளவேண்டு மல்லவா? இத்தொழிலினுல் நஷ்டம் வராதென்பதும் " மேழிச்செல்வம் கோழை படாது " என்ற தனிமொழியால் பொலிகின்றது. ரசவாதத்தைப்போல் பெருலாபத்தைக் கொண்டுவரும் ஒரு தொழிலாக இதைக் கருதவேண்டு மென்றே " விவசாயமோ ரசவாதமோ " என்கிற பாமரப் பழமொழி இந் நாளும் வழங்கிவருகிறது.

விவசாயத்தால் லாபம் உண்டு, பேர் உண்டு, பூமாதேவியின் கடாக்ஷம் உண்டு, ஜீவகாருண்யம் சம்பூர்ணமாய் உண்டு. இத்தகைய காமதேனுவாகிய இச்சிறந்த தொழிலிலேயே நம் கவனத்தைச் செலுத்துவதற்காகவே, தஞ்சைவைசிய சகோதரர்களே ! தங்கள் முன்னிலையில் விவசாயத் தொழிலை நிறுத்தி யிருக்கின்றேன். நாம் இதனை ஆதரிக்க இதுவே சமயம். இத் தொழிலை ஆரம்பிக்கும் பக்ஷத்தில் பல ஆயிரக்கணக்கான ஜனங்கள் ஜீவிக்கும். லக்ஷக்கணக்கான கால் நடைகள் நன்மையடையும். ஜீவ ராசிகளுக்கு ஒரு பெரு நன்மையுண்டாகும். இதோடு நாம் ஏராளமான லாபத்தை யடையவும் மார்க்கம் உண்டு. இத்தகைய நல்ல தொழிலின் மேல் நம் நாட்டம் உடனே செல்லல் வேண்டும். இப்பெரும் பரோப காரமான வேளாண்மைத் தொழிலைக் கொண்டு நாம் விருத்தியடை வதுடன் தேசத்தையே முன்னேற்ற மடையுமாறு செய்யும்படி எனது சகோதரர்களை இன்னும் ஒருமுறை வேண்டிக் கொள்ளுகிறேன். " வரப்பு யர " என்று ஆசிர்வதித்த ஔவையினது திருவாக்குப்படி நம்முடைய செல்வத்தினுலும் விடா முயற்சியாலும் வரப்பு உயரச்செய்ய வேண்டியது நமது முதற்கடமையாகும். ''வரப்பு உயர நீர்உயரும், நீர் உயரநெல் உயரும், நெல் உயரக் குடி உயரும்,'' இதை அநுசரித்தே நமது கவித்திலகமாகிய கம் பரும் " வேதநூல் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும் ஓதுவா ரெல் லாம் உழுவார்தம் தலைக்கடைக்கே, கோதைவேன் மன்னர் குடைவளமும்

கொழுவளமே, ஆதலால் இவர் பெருமை யாருரைக்க வல்லார்" என்று கூறி இத்தொழிலை யாவருக்கும் சிபார்சுசெய்திருக்கிறார். சகோதரர்களே! உடனே இவ்வளவு லாபகரமாயுள்ள பரோபகாரம் நிறைந்த இத்தொழிலைத் தேசத்தின் நன்மையை நாடியும் நம்லாபத்தை உத்தேசித்தும் யாவரும் கைக்கொள்ளுமாறு ஸ்ரீ சண்முகநாதனைப் பிரார்த்திக்கிறேன்.

யெ-பேரி-கரு-மு. சின்னையா செட்டி,
திருக்கோவிலூர்.

## தமிழ் நாடு

அமிழ்தினுமினிய தமிழ்மொழி நவலும் அன்பர்காள்,

1. திராவிடம் எனும் தமிழ்முறை அருந்தி அன்னதை யாவரும் பருகி வரத்தக்க ஞானச்சுடராய் விளங்கி வருகின்ற நம் ஆனந்தன் வாயிலாக நம் தமிழன்னை பரவியிருந்த நாட்டையும், இருக்கிற நாட்டையும் பற்றிச் சிறிது உரைக்க விரும்பினேன். ஆனந்தன் இடந்தருவானாக.

2. ஓர்கால் நம் தமிழ்நாடானது வடக்கே ஹிமயம்தொடுத்து தெற்கே குமரிமுனை வரை (அதாவது பாரததேசமாய் இந்தியா முழுதும்) பரவியிருந்ததென்று தெரிகிறது. ஆனால் அதற்குரிய அத்தாட்சிகள் சிற்சில விடங்களிலேயே காணக் கிடைக்கின்றன வாதலால் நிச்சயிப்பதற் கேது வில்லை. என்றாலும்.

"தென்குமரி வடபெருவகள்
குணகுட கடலாவெல்லை
குன்றுமலை காடுநா
டொன்றுபட்டு வழிமொழியக்
கொடிது கடிந்து கோளிருத்தி
படுவதுண்டு பகலாற்றி
இனிதுருண்ட சுடர்நேமி
முழுதாண்டோர் வழிகாவல்
* * * * *
விடியென முழங்கும் முரசின்
வரையா வீகைக் குடவர்கோவே" (புறநானூறு)

என்னும் பாட்டால் வடக்கே ஹிமயமலையும் தெற்கே குமரிமுனையும் கிழக்கும், மேற்கும், கடலாற்சூழப்பட்ட இவ்விந்தியா தேசத்திலுள்ள சிற்றரசர்களை யெல்லாம் குடவர்கோ என்னும் தமிழரசன் வென்று தனதுவிற் கொடியை ஹிமயமலையில் நாட்டினான், என்றும் அவன் காலத்தே தமிழகமானது பரதகண்ட முழுவதும் பரவியிருந்த தென்றும் தெரிகிறது. இன்னும், ஓர் சோழ அரசன் ஒருவன் இந்தியச் சிற்றரசர்களையெல்லாம் வென்று தனது புலிக்கொடியை மகாமேருவாய ஹிமயமலையில் நாட்டினான் என்றும்

பெரியபுராணச் செய்யுளில் காணக் கிடைக்கின்றது. அதனால் தமிழ்நாடு ஹிமயம்வரை பரவியிருந்ததென்று, தெள்ளிதில் அறியலாம்.

3. ஆனால் இதற்குப் பிந்தியவர்களான தொல்காப்பியர் முதலியோர் காலத்தில் வடக்கே வேங்கட மலையும் தெற்கே குமரிமுனையும் கிழக்கும் மேற்கும் கடலாற் சூழப்பட்ட பிரதேசமே தமிழ் நாடென்று பிரசித்தம். அதற்குரியவும், மருத்தற்கரியவுமான அத்தாட்சிகள் பலவிடங்களிலும் காணக்கிடைக்கின்றன. உதாரணமாக, அகஸ்தியரின் சீடரான தொல்காப்பியர் தனது தொல்காப்பியத்தில்,

"வடவேங்கடம் தென்குமரியாயிடைத்
தமிழ் கூறும் நல்லுலகம்" என்றும்,

மற்றொரு சீடரான சிகண்டியாரது சிகண்டியில்,

"வேங்கடம் குமரி தீம்புனல் பௌவம் என்று
இந்நான் கெல்லை தமிழது வழக்கே" என்றும்,

இராச ரிஷியாகிய இளங்கோவடிகளது சிலப்பதி காரத்தில்,

"நெடியோன் குன்றமும் தொடியோன் பௌவமும்
தமிழ் வரம் பருத்த தன் புனநாடு" என்றும்,

இன்னும் பவணந்தி முனிவரது நன்னூலில்,

"குணகடல் குமரி குடகம் வேங்கடம்
எனுநான் கெல்லையி னிருந்தமிழ்க் கடலுள்" என்றும்,

கூறி யிருக்கிறது.

இனி தென்குமரி நாடானது தெற்கே வெகுதூரம் பரவி யிருந்து பின்னால் கடல் கொள்ளப்பட்டதென்றும் இளங்கோ வடிகளது சிலப்பதி காரத்தில்,

"பஃறுளியாற்றுடன் பன்மலை யடுக்கத்து
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்று

கூறப்பட்டுள்ளது. இதனாலேயே அப்பொழுது தென்குமரி நாட்டிலுள்ள ஏழ் தெங்கு ஏழ் மதுரை ஏழ் குன்றம் முதலிய நாடுகள் தமிழ் நாடே எனச் சாற்றுதற் கிடந் தருகின்றது.

இன்னும் தமிழ் நாட்டை,

"தென்பாண்டி, குட்டம், குடம், கற்கா, வேண்பூழி,
பன்றியருவா யதன் வடக்கு—நன்றாய
சீதம்மலாடு, புனநாடு, செந்தமிழ்சே
ரேதமில் பன்னிருநாட் டெண்"

"சிங்களம், சோனகம், சாவகம், சீனம், துளுக், குடகம்
கொங்கணம், கன்னடம், கொல்லம், தெலுங்கம், கலிங்கம், வங்கம

> கங்கம், அகதகம், கடாரம், கவடம், கடுங்குசலம்
> சங்கும் புகத்தமிழ் சூழ் பதி னெழ் புவிதா மிவையே."

என்று கூறுவதால், தற்காலத்திய இலங்கை, அரேபியா, பெங்காளம், பர்மா, சீனு, ஜாவா, ஒரிஸ்ஸா முதலிய நாடுகள் எல்லாம் தமிழ் நாடே யென்பதை ஒருவாறு நிச்சயிக்கலாம்.

4. இன்னும் இதற்குப் பிற்பட்ட கம்பர், புகழேந்தி முதலிய புலவர்கள் காலத்தில் தமிழ் நாடானது சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு, நடுநாடு, தொண்டை நாடுகளிலேயே பரவியிருந்தது. இதற்கு மேற்கூறிய புலவர்கள் ஆங்காங்கு பாடிய பாட்டால் அறியலாம்.

5. ஆ! இவ்வளவு தூரம் பரவியிருந்த தமிழ்நாடு தற்காலம் எந்நாட்டில் பரவியிருக்கிற தென்பதை நாம் அறிய முடியவில்லை. இருந்தாலல்லவோ அறியலாம். தற்காலம் தமிழ் நாடடைந்திருக்கும் சீர்கேட்டை நண்பர்கள் அறிந்திருப்பார்கள். ஆ! இவ்வளவு குறைந்த பரப்பையும் சீர்கேட்டையும் நம் தமிழ் அன்னை யடைந்ததற்குக் காரணம் யாதெனில் மாணுக்கரின் அக்கரைக் குறைவே. தற்காலத்திய மாணுக்கர் ஒவ்வொருவரும் இரவும் பகலும் ஆங்கிலேய புத்தகத்தைத்தவிர வேறு புஸ்தகத்தைத் தொடுவதேயில்லை. தமிழ் தாய்ப்பாஷைதானே, எளிதில்வந்துவிடும் என்றுவரிதேயிருக்கின்றனர். ஒருகால் இந்தியா முழுதும் ஏகச்சக்ராதிபத்யம் செலுத்திவந்த தமிழரசி தற்காலத்தில் இவ்வாறு க்ஷீணதசை யடைந்ததற்குக்காரணம் என்னையோ அறியோம். தமிழைப்போன்ற அழகும், தெய்வத்தன்மையும் பொருந்திய பாஷையும் உளதோ. தமிழ் நூல்களாய,

> "சிந்தாமணியின் நந்தாப் பொருண்மையும்
> மணிமேகலையின் அணிகெழு போக்கும்
> சிலப்பதிகாரத் திலக்கியச் செலவும்
> கம்பன் கவியின் செம்பொரு ளின்பமும்
> பத்துப்பாட்டின் வித்தக நடையும்
> கல்லாடத்தின் எல்லாச் சிறப்பும்
> வருமோ மற்றோர் வாக்கின் வழித்தாய்
> வாரா தென்பது உண்மையே யன்றோ."

6. நம் தமிழ் அன்னை தற்காலத்தில் அடைந்திருக்கும் க்ஷீணதசையைப்பற்றி ஆனந்தனில் பலரும் பலவிடத்தும் கூறியுள்ளார்கள். ஆதலால் ஒவ்வொரு மாணவரும், நண்பரும் நம் தமிழை விருத்திசெய்ய வேண்டு முயற்சி செய்யுமாறு வேண்டிக்கொள்கிறேன். எல்லாம் வல்ல பரமன் அருள் புரிவாராக.

தி. மு. பாஸ்கரன்,
திருநெல்வேலி.

## இல்லறம்—ஜீவகதி.

(307-வது பக்கத் தொடர்ச்சி)

மறு சரீரத்துக்குக் காரணம் அவ்வான்மாவின் ஆசையே ஆகையால், அவ்வாசையற்ற வான்மா சுத்தமேயாம். அவன் செய்த பாபகன்மங்களுக்கு யாது கதியெனின், மரண வேதனையாகிய மஹா துன்பகாலத்தில் எல்லா வற்றையும் வெறுத்து ஞானசொரூபியாகிய கடவுளைச் சிந்தித்தானாகையால் அந்த ஞானாக்கினியா லது தகிக்கப்பட்டொழியும். தெய்வ சிந்தனையாகிய புண்ணிய மேமிட்டிருக்கும். அப்புண்ணிய பலனை யனுபவிக்கத்தக்க உலக மெதுவோ அவ்வுலகத்தில் அதனை யனுபவிப்பதற்குரிய சரீரத்தையே அவ் வான்மா அடையுமென்க. உத்தாரயணம் கிருஷ்ண பட்சத்திரவில் உடலை விட்ட ஆன்மாவும் புண்ணியான்மாவே .யாயினும் பாப சம்பந்தமுள்ள தாகவே கருதப்படும். குறித்த வுலகத்தை யடைய நாட் செல்லும். பகலில் மரணமடைந்தது கொஞ்சம் சீக்கிரமாகச் செல்லும். சுக்கில பட்சத்திரவும் கிருஷ்ண பட்சத்துப் பகலும் ஒரு தன்மையனவாம். எவ்வாறுயினும் உத்த ராயணத்தில் உடலை விட்ட ஆன்மா புண்ணிய முள்ளதாகவே கருதப்படும். யாது காரணத்தால் எனின் போய்ச்சேரவேண்டிய இடத்தைச் சீக்கிரத்தில் அடைவதினாலே யென்க. சுத்த வீரர்களும் முற்றத் துறந்த சந்நியாசிகளுந் தவிர அதிக புண்ணியமுடைய ஆன்மா பன்னிரண்டு நாட்களுக்குள் குறித்த விடம் போய்ச்சேரும். குறைந்த புண்ணியமுடைய ஆன்மாக்கள் ஒருமாதம் மூன்றுமாத காலவளவைக்குள் போய்ச் சேரலாம். எவ்வாறுயினும் எல்லா ஆன்மாக்களும் ஒரு வருஷத்துக்குள் புண்ணிய வுலகத்தையோ நரக வுல கத்தையோ போய்ச் சேர்ந்துவிடும்.

தட்சிணாயனத்தில் மரணமடைந்த வான்மா பாபான்மா வென்றே கருதப்படும். புண்ணியமுடையதாக விருந்தால் சூரிய கிரணங்களால் இலே சாகும்வரை அலைந்து பின்பு கருதப்படும் புண்ணிய போகத்தை யடையும். பாபாத்மாவாகவிருந்தால் சந்திர மார்க்கத்தில் நெடுங்காலம் சுழன்று திரிந்து கொண்டிருந்து பின்பு நரகத்தை யடையும். மஹா பாபாத்மாக்களா யிருந் தால் சந்திர கிரணத்தால் அதிகமாய் நனைந்து கனதியாய்ப் பூமியிலேயே விழும். பூமியிலே மண்ணோடு கலந்து புழு பூச்சிகள் கொசுகு ஈக்கள் ஆகிய ஜன்மத்தை யடையும். இன்ன மதிக பாபமுள்ளவை பூமிக்குளிறங்கும். அதல, விதல, சுதல, ரஸாதலம் வரையும் சென்று அவ்வவ் நரக வுலகத்துக் குத்தக்க சரீரத்தைப் பெறும். அங்கே முழுவதும் துன்பமே. ரசாதலம் அக் கினி யெரிந்துகொண்டிருக்கு மிடமாதலா லதைக்கடந்து செல்லா. ரஸ தலத்தை யடையுமான்மா அக்கினியால் வெந்துகொண்டு மஹா துன்ப த்தை யடையும். அக்கினியால் தகிக்கப்படுவதினால் சூட்சும சரீரத்தி லடங் கிக் கிடக்கும் பாபம் சிறிது சிறிதாகக் குறையும். குறையவே மேலே கிளம்பிச் சுதல விதல அதலங்களை முறையே யடைந்துபின் பூலோகத்தை

யடையும். அனுபவத்தினுல் பாபகர்மம் முற்றுந் தொலைந்திருந்தால் மனித சரீரத்தை யடையும். அன்றேல் பசு பட்சிகளாதி ஜந்துக்களாக உருவெடுக்கும்.

இனி பாபத்திற் குறைந்த சில ஆன்மாக்கள் சந்திரகிரண மார்க்கத்திலகப்பட்டுக்கொண்டு உழலும். பகற்காலத்தில் சூரிய கிரணங்களால் மேலே யிழுக்கப்படும். இரவில் சந்திரகிரணங்களால் பூமியிலிருத்தப்படும். எந்தப் பதார்த்தமும் மேலே யேறுவது கடினமாய்ச் சற்று மெதுவாகவே செல்லும். கீழே யிறங்கும்போது வெகு வேகமா யிறங்கும். இதைத்தான் "சாணேற முழம் சறுக்கிற்று" என்ற பழமொழி விளக்கும். உத்தராயணத்தில் வேகமாய்ச் செல்லுதலால் நெடுந்தூரம் சென்றால் இராக்காலத்தில் அதைவிடப் பல மடங்கு அதிகமாய்க் கீழே யிறங்கிவிடும். இப்படியே சூரிய கிரணத்தால் ஏறுவதும் சந்திர கிரணத்தா லிறங்குவதுமாக வலைந்து திரிந்துகொண்டிருந்து கடைசியில் அதன் பாபத்துக்கேற்ற பாபவுலகத்தை யடையும். எப்படியானுலும் முந்நூற்றறுபத்தைந்து நாட்களுக்குள் குறித்த விடம் போய்ச்சேரும். அவ்வுலகானுபவ முடிந்ததும் மறுபடி யவ்வுலகத்தை விட்டுப் பாப சேஷத்துக்காகவோ புண்ணியத்துக்காகவோ நியமிக்கப்பட்டவுலகத்தில் சேர்ந்து அவ்வுலகத்துக்குரிய தனு கரண புவன போகங்களை யனுபவிக்கும்.புண்ணியமும் பாபமுமாகியவிருகன்மங்களும் ஜனனத்துக்கே காரணமாகும். ஆதலாற் புண்ணிய கர்மத்தையே விரும்பிச் செய்யவேண்டும். அத்துடன் பக்தி உண்மையாகச் செய்யவேண்டும். தெய்வபக்தியுடன் கலவாத புண்ணியம் பெரும்பயன் அளியாது. தெய்வம் என்பது சிற்கனந்த சொரூப முடையதாதலால் அதைச் சிந்திக்கச் சிந்திக்க மனம் பாவனமாய் ஞானமயமாகும். ஞானக்கினியால் பாபகர்மந் தகிக்கப்படும். தகிக்கப்பட்டுச் சாலோக, சாமீப சாரூபமாகிய பத முத்திகளை யடைந்து புண்ணிய பலனை யனுபவித் தொழித்த வனந்தரம் சாயுஜ்யம் என்கிற ஐக்கியமுத்தியை யடையும். இதுவே கிரம முத்தியென்பது. ஐக்கிய முத்தியடைந்த வான்மா மீண்டும் பிறவாது. இதனு லிம்முத்தியை மீளாக்கதியென்று பெரியோர் கூறுவார்கள். இவை யொரு சமையம் பின்னுல் எழுதப்படும்.

இனி யிவ்வான்மாவின் கதி யிவ்வாருயின் அவ் வான்மாவின் சரீரம் யாதாகுமோ வெனின் அது கூறுதும். ஜீவவியக்க நீங்கியசரீரம் பிரேதமென்னப்படும. அணுக்கள் ஜீவ அணு, ஜட அணு என விருவகையாம். சித்தணுவென ஒன்றுண்டென்றும் ஒரு சாரார் கூறுவார்கள். ஜீவவணுவிலதனையடக்கி அணுக்களிரண்டென்பதே பெருவழக்கும் பெரியோர் கொள்கையுமாம். இவ்விருவகை யணுக்களும் சேர்ந்தே சரீரமாகின்றது. இச்சரீரத்தில் தலைவனுகிய ஆன்மாவுள்ள வரைக்கும் சரீரமியங்கும். ஆன்மா நீங்கினுல் இயங்காது. ஜீவசக்தியை விருத்தியாக்கி யியங்கச்செய்யும் பிராண வாயு சரீரத்தை விட்டொழிதலால் சரீரமியங்குத லரிது. அக்கினியின்

தன்மையுள்ள பிராணவாயு நீங்கச் சரீரம் குளிர்ச்சியடைந்து, இரண்டொரு தினங்களுக்குள் அழுகத் தொடங்கும். அதற்கு முன்னால் அது அவ்வாறு அழுகிக்கெடாதபடி பிரேத ஸம்ஸ்காரகிரியை செய்யப் படுகின்றது. அது இருவகையாகச் செய்யப் படுகின்றன. அவற்றுள் பெரும்பாலார் கொள்கை புதைத்தலாம். மற்றொன்று அக்கினியால் தகிக்கப்படுவது. இவ்விரண்டினுள்ளும் தகனஞ்செய்வதே தகுதியுடைய தென்பது நமது நாட்டுப் பேரறிவுள்ள பெரியோர் கொள்கையாம்.

பூமிக்குட் புதைத்தலால் தீமையுண்டா மென்பது வைத்திய நூல்கள் பதார்த்தகுண சாஸ்திரங்களின் கருத்து. சரீரத்துக்கு அழுகும் தன்மையுண்டென்பதை யெவரும் மறுக்கத் துணியமாட்டார்கள். யாவருக்கு மொப்ப முடிந்ததே. அழுகினால் அதில் புழுப்பூச்சிக ளுண்டாவதும் பிரத்தியட்சம். அக்கிருமிகளெல்லாம் ஷெ தன்மை யுடையன. பூமிக்குள் புதைத்து விட்டால் அச்சரீரம் மண்ணோடு கலந்து பலவகைப்பட்ட கொடிய விஷக்கிருமிகளாய்ப் பரிணமிக்கும். அவை யொன்றை யொன்று தின்று ஜீவிக்கும். பூமியிலுள்ள கெட்ட வாசனையையும் ரஸத்தையும் உட்கொள்ளும். பூமிக்குள் வெய்யில் இல்லாமையால் அழுகினசரீரம் சீக்கிரம்காயாது. ஊனீரும் வடியும், இதனிலும் கிருமிக ளுண்டாகும். இவ்வாறு ஒருசரீரம் அநந்தமான சரீரங்களாகப் பரிணமிக்கும். அதல முதலிய கீழுலகங்கள் துன்பத்துக்கிடமான நரகலோகமா மென்று முன்னரே கூறப்பட்டது. ஆதலால் ஒரு சரீரமாய்ப் பாபபலனாகிய துன்பத்தையே நுகரும்.

ஆயின் ஆன்மாவே சிற்சொரூபி யென்றும் இன்பதுன்பங்களை நுகர்வதும் ஆன்மாவே யென்றும், நூல்கள் கூற நிற்க, ஆன்மாவற்ற சரீரம் துன்ப நுகர்வ தெவ்வாறெனின், சரீர ஜடஜீவ சக்திகளுடன் கூடிய தென்று கூறினோம். ஜீவசக்திக்குச் சிற்சத்தியின் சம்பந்த முண்டென்றுங் கூறினோம். ஜடசக்தி மிகுந்தும் மற்றைய குறைந்து மிருப்பதே சரீர வியல்பு. ஜடசக்தியின் மறைப்பினால் ஜீவசக்தி யுணர்வும் இயக்கமுமற்றிருக்கின்றது. புழுவாயினும் பூச்சியாயினும் சிற்சீவ ஜடசக்திகளுடன் கூடியிருத்தலாலும சரீர மெடுக்கும்போதே பிராணவாயுவாகிய ஜீவன் சம்பந்தப்படுதலாலும் உணர்ச்சி யுண்டாம். பூமிக்குள் அனந்தமான சிற்சொரூபான்மசத்தி பாபத்தால் புகுமென்று கூறினோமாதலால் அவ்வான்ம சக்தியையும் பெற்று இன்பதுன்பங்களை நுகருமென்க. சரீரத்தில் ஜீவனுமான்மாவும் இல்லாவிட்டாலும், ஜீவனிருந்ததனா லுண்டான ஜீவவாசனை நெடுங்கால மொழியாம லிருக்கும். இதனால்தான் ஒருவரு மறியாமல் இரகசியத்தில் கொலைசெய்து, புதைக்கப்பட்ட விடத்தில் பயங்கரமான தோற்ற முண்டாவது இயல்பு. இச்சமாசாரத்தை முன்புகண்டும் கேட்டும் அறியாத புதியமனிதன் அவ்விடத்தில் ஏதோ சொரூபங் காணப்படுவது போலவும், யாரோ பேசுவதுபோலவும் அறிவான். அறிகிறதாக அநேகர்

சொல்லவும் கேள்வியுண்டு. சுயமாக அறிந்துகொண்டது முண்டு. இந்தப் பதார்த்தகுண சாஸ்திரத்தைப் பரிக்ஷித்து அறிவதற்காக முயன்று பலவிடங்களில் இரவிலும் பகலிலு முலாவித்திரிந்து தொனி கேட்கப்படுவதையும், ஏதோ நாம் முன்பின் அறிந்திராத ஒரு சொரூபம் நடமாடுவதாகவும் நேரில் பார்த்தறிந்தவர்கள் அநேகர். எமக்கும் இவ்விஷயத்தில் அதிக அனுபவமுண்டு. இவ்வகையான பதார்த்தகுண நூல்களை யெய்தப்பெறாத அந்நிய நாட்டாரிந்த வுண்மையை யுணரமாட்டார்கள். இந்தச் சீவசக்தி சரீரமுற்றும் அழுகி மண்ணொடு மண்ணாய் மடிந்துபோனாலும் கபாலம் வெடிக்கும் வரைக்கும் நீங்காது. ஏனெனில் பிராணவாயுவின் பேதங்களின் ஒன்றான தனஞ்செயன் என்னும் வாயு கபாலத்தில் வசிக்கும். கபாலம் வெடித்தாலன்றி யது வெளிப்படாது. அந்தத் தனஞ்செயன் என்னும் வாயுவுள்ளவரைக்கும் ஜீவசக்தி யந்தச் சரீரத்திற்குண்டு. அதுவரையும் துர்மரணமடைந்த ஆன்மாக்களின் சரீரம் புதைக்கப்பட்ட விடங்களில் மேற்குறித்த காட்சிகள் நிகழும். இதனால் ஜீவான்மாவிட்டு நீங்கின சரீரத்திற்கு ஜீவசத்தியுண்டென்றும், அது பஞ்சபூதங்களுடன் சம்பந்தப் படும்போது ஜீவசக்தியைப் பெற்று இன்பதுன்பங்களை நுகருமென்பதுங் கொள்ளப்படும்.

(இன்னும் வரும்.)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

---

## கடுஞ்சினம்.

பரந்தது இப்புவனம். மேன்மை யுற்றதுதான் மானிடஜன்மம். குறுகியதான நஞ்சீவியகாலத்துள் நாம் கொள்ளுங் குணங்கள் பலவுள. அவற்றுள் கொடிதினுங் கொடியதாகிய கடுஞ்சினம் தீவினைகளெனு மறுகுணங்களுக்கும் அடிப்படியாகி நிற்கின்றது. மானிடவாழ்வான பயிரில் பாழ்விளைவிக்கும் கோபத்தை யறவே ஒழித்துவிட வேண்டுமென்பது குறித்தே "ஆறுவது சினம்" என்று ஔவைப் பிராட்டியார் கூறியுள்ளார்.

ஏனெனில் கோபம் விளைத்திடுங் கூற்றுகளாகும், வஞ்சகமும், பொறாமையும், இகழ்தலும், தூற்றுதலும் பழிபாவங்களில் முடிகின்றன. சினமனமுடையவன் தூயமனத்தா னல்லன். சஞ்சல சித்த முடையவனாகிறான். கோபமிருக்க வேண்டியதுதான். ஆயினளவுக்கு மிஞ்சியது நஞ்சாகும். அவன் கடுந்தொழிற் புரியவும் பின் வாங்கின்றானில்லை. கோபம் படைத்தாரை அனைவரும் எள்ளுவபோல் நாமும் சினத்தைப் புறக்கணிக்க வேண்டும். ஏனெனில், இச்சினம்,

"மூங்கிலிற் பிறந்த முழங்குதீ மூங்கின்
முதலற முடிக்குமா போல
தாங்கரு சினத்தீ தன்னுள்ளே பிறந்து
தன்னுற விளையெலாந் தவிர்க்கும்

ஆங்கதன் வெம்மை அறிந்தவர் சமையால்
அதனையுள் ளடக்கவு மடங்காது
ஓங்கிய கோபத் தீயினை யொக்கும்
உட்பகை யுலகில்லே றுண்டோ ?"

என்னும் குணங்களை யுடையது. நல்லவனொருவன் விட்டுவிடக் கூடிய குணங்களுள் இது முதன்மை பெறுகின்றது என்பதுவும்,

"உள்ளங் கவர்ந்தெழுந் தோங்குஞ் சினங் காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க,"

என்பதனால் அங்கையங்கனியாகிறது. அனைவர்க்கும் கோபத்தீயுண்டு. கோபத்தனல் கொட்டி எரிக்கும் வன்னெஞ்சன் தன்னிலக்குத் தப்பித் தானே கெட்டழிகிறான். மேலும்,

"நெடுங்கால மோடினும் நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப்பரக்கும்—அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்"

என்னும் பிரிவினைகளையு மது உடையது. அதுபோன்ற கோபப் பொறியினை அடக்க வியலாதவன்,

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு"

என்றபடி அவதியுறுவான். ஏனெனில்,

"செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்"

அதுபோல இல்லை யெனின்,

"தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

என ஆகும். உதாரணமாக,

"கோபத்தாற் கௌசிகன் தவத்தைக் கொட்டினான்
கோபத்தால் நகுஷனும் கோல மாறினான்
கோபத்தால் இந்திரன் குலிசம் போக்கினான்
கோபத்தால் கெட்டவர் கோடி கோடியே"

ஆதலால் சினம் விடுத்துச் சிறப்புறக் கமலவண்ணனைப் போற்றுமின் !

நா. கு. கோபாலய்யங்கார்,
புங்கனூர்.

---

குறிப்பு:—நண்பர்களே ! மேற்கண்ட வியாசத்தின் தலைப்பில் சினம் என்னாது கடுஞ் சினம் என்பதில் ஓர் விசேடம் அறியக்கிடக்கிறது. என்

னெனில் "கோபம் கெட்டது அதை நீக்கிவிடவேண்டும்" என்பது, சொன் மாத்திரத்தில்கூறக்கூடியதேயன்றிச் செய்கையால் நடத்திக்காட்டுவது சுலபமன்று. சினம் தமோகுணத்தைச் சேர்ந்தது. இதைத்தீ என்றும், பேய் என்றும், செந்நாய் என்றும், ஆன்றோர் கூறியுள்ளார். மேலே கூறப்பட்ட "நெடுங்கால மோடினும் நீசர்வெகுளி * * * சீர்கொண்ட சான்றோர் சினம்" என்றதாலும், "நீரில் எய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்" என்பதனாலும் சான்றோரிடத்தும் சினம் என்பதுண்டு என்று விளங்குகிறது. ஆனால் அது முளைத்தவுடனே அதைக்கொழுந்துவிட் டெரியும்படியாவது நிலைத்து நிற்கும்படியாவது விடாமல் உடனே அறிவைக்கொண்டு அகற்றிவிடுவதே மேலோர் செய்கையாகும். கோபத்திற்கு மூலம் நான், எனது என்பதே. நான் என்ற அகங்காரம் அடியோடு நசிந்தாலன்றிக் கோபம் அடியோ டொழியாது. நான் என்பதற்றால் எனது என்பதும் ஒழியும். "நான் எனது" அற்றோன் தன்னையறிந்தவனாவான். ஆகவே ஞானியொருவனே கோபத்தை யடியோடு விட்டொழித்த சாந்த மூர்த்தியாவான்.

பத்திரிகாசிரியர்.

---

## இந்தியா.

எந்த நாடு விவஸாயம், கைத்தொழில், வியாபாரம், கல்வி ஆகிய இந்நான்கு அம்சங்களிலும், இதர நாடுகளைவிட மிகுந்த மேன்மைபெற்று விளங்குகிறதோ, அந்த நாடே நாகரீக முள்ளதாயும் எவரும் மெச்சத்தகுந்தாயும் விளங்குகிறது. இந்த அம்சங்களில் இங்கிலாந்து தேசமானது கழிந்த பல நூற்றாண்டுகளாய் படிப்படியாய் முன்னேற்றம் அடைந்து கொண்டே வந்ததினால் உலகத்தில் மிகப் பெரிய தேசமாய், எல்லா நாட்டிற்கும் பல அரிய விஷயங்களைப் போதித்துக் கொண்டு, செல்வத்தில் கொழுத்த தேசமா யிருக்கின்றது. செல்வாக்குப் பெற்றும் விளங்குகின்றது. இந்த விதமான உன்னதபதவியை இங்கிலாந்து அடைந்தது இருபதாவது நூற்றாண்டில். ஆனால் நமது ஆரிய வர்த்தமானது பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் இதரநாடுகள் நாகரீகம் என்பது இன்னதென்றே அறியாத காலத்து, மேற்சொன்ன அம்சங்களில் இப்போது இங்கிலாந்து அடைந்திருக்கும் பக்குவத்திலும் பதின்மடங்கு அதிகமாய்ப் பக்குவம் பெற்று இருந்தது. எந்நாட்டினும் ஓர் நன்னாடாய் எவரும் போற்றத்தகுந்ததும் புகழத்தகுந்ததுமா யிருந்தது.

இந்தியா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய தேசங்களைப்போல் ஒரு சிறு இராஜ்யமன்று. ஜனத்தொகையிலும் வடிவிலும் அவைகளைவிடப் பன்மடங்கு பெரிது. அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களில் பாதியும், ருஷியாவின் இருமடங்கு ஜனத்தொகையும் அடங்கிய ஒரு பெரியதேசம். இந்தியாவைத் தனியான ஒரு கண்டமாகவே கருதலாம். உலகஜனத்

தொகையில், ஐந்தி லொருபாகம் இந்தியாவின் ஜனத்தொகையாம். இந்தியாவிலுள்ள மனிதர்கள் சில ஆங்கிலேயர்கள் கருதுவதுபோல் கருப்புமனிதரன்று. நாமும் இந்தியாவுக்கு வரும்போது வெள்ளையாகவே யிருந்தோம். ஆனல் சீதோஷ்ண ஸ்திதியினல் நமது நிறம் மாறிவிட்டது. பூமியின் வளப்பத்தினலும், பருவத்திற்கேற்ற மழையினலும் ஏராளமான உணவுப் பொருள்கள் விளைவதனல் இதர ஐரோப்பிய நாடுகளைப்போல் இந்நாடு தனது உணவு உடைச் சாதனங்களுக்கு அந்நிய நாட்டின் உதவியை எதிர்பார்க்கவேண்டியதில்லை. ஜனங்களின் முயற்சியும், இயந்திரங்களின் சவுகரியமும் ஏற்படும் விஷயத்தில் அநேக காடுகளும் மலை உச்சிகளும் சீர்திருத்தப் பெற்று விளைவுகள் ஏராளமாகி இப்போது ஏற்றுமதி செய்வதைவிடப் பன்மடங்கு அதிகமாய் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம். மிகுந்த லாபத்தை யடையலாம். உலகம் முழுதுக்கும் எல்லாச் சாதனங்களையும் பயிர் செய்வதற்குரிய சவுகரியங்கள் இந்தியாவி லிருப்பதால், ஜனங்கள் மிகுந்த ஊக்கத்துடனும், சிரத்தையுடனும் உண்மையுடனும் உழைக்கும் பட்சத்தில், விவஸாய விஷயத்தில் மற்ற நாடுகள் கற்கத்தகுந்த விதத்தில் சீரும் சிறப்பும் வாய்ந்து பிரகாசிக்கும்.

கைத்தொழில், வியாபாரம் இவ்விரண்டிலும் இந்தியா கி. மு. விலேயே மேன்மையடைந் திருந்தது. வஸ்திரங்கள் நெய்வதில் மிகுந்த சாமர்த்திய முள்ளதா யிருந்தது. இப்போது இயந்திரங்களின் உதவியால் செய்யும் துணிகளைவிட நேர்த்தியான துணிகள் நெய்ததற்குப் பல ஆதாரங்கள் இருக்கின்றன. இப்போதும் பட்டுவஸ்திரங்களில் காசிப்பட்டு, காஞ்சீபுரம் பட்டுக்களைப்போல் நேர்த்தியாயும், ஈடுதாங்கக்கூடியதாயும், சைன, ஜப்பான் முதலிய தேசப்பட்டுகள் இருப்பதில்லை என்பது நம்மவர்களின் பிரத்தியட்ச அநுபவம். ஒரு காலத்தில், இந்தியா, ஆப்பிரிக்கா முதலிய தேசங்களுடன் வியாபாரம் செய்துகொண்டிருந்தது. தங்கம், வெள்ளி, இரும்பு முதலிய உலோகங்கள் வெட்டி யெடுக்கப்பட்டும், அவ்வுலோகங்களில் பல வேலைகள் அற்புதமாய்ச் செய்ததாகத் தெரிகிறது. இப்போதும் வெண்கல வேலையிலும், நகைகள் செய்வதிலும் நமது ராஜ்யத்திற்கு வேறொரு இராஜ்யமும் சமமாகாது என்று துணிந்து கூறலாம். அவைகளைச் சீர்திருத்த மஹான்கள் முயற்சிசெய்யும் விஷயத்தில் எவ்வளவு நன்மையை நமது தேசம் அடையும்.

நாகரீகத்தைப் போலவே கல்வியிலும் மேன்மைபெற்று விளங்கிற்று. பல அரிய கிரந்தங்களின் உற்பத்தி இந்தியாவிலே தான். நமது முன்னோர்கள் தியாகம், யோகம், தானம் முதலியவற்றால் மனோவிசாலம், புத்திவிசாலம் ஆகிய இவ்விரண்டையும் அடைந்து, அதனலுள்ள இன்பத்தை மற்றவர்களும் பங்குகொள்ளுமாறு, தங்கள் அனுபவ முதிர்ச்சியினல் பல பிரபந்தங்களை உண்டுபண்ணி யிருப்பதனல், நாம் இப்போது சிற்சில சங்கதி

களை அறியும் சக்தியை அடைந்திருக்கிறோம். எல்லா நாட்டுப் பிரபந்தங்களுக்கும் தாய்ப்பிரபந்த மென்று சொல்லக்கூடிய அளவு எழில், நலன், சுவை, இனிமை, ரஸம், அலங்காரம் முதலிய அம்சங்களெல்லாம் நன்கமையப் பெற்ற, இராமாயணம், மஹாபாரதம், சுருதி, ஸ்மிருதி, பகவத்கீதை, முதலிய பிரபந்தங்கள் மேற்சொன்ன அம்சங்கள் பரிபூர்ணமாய் அமைந்திருக்கின்றன என்பது உலகறிந்த விஷயமன்றோ! இந்நூல்களுக் கிணையான நூல்களும் உண்டோ? சங்கீத சாஸ்திரம், சிற்பசாஸ்திரம், நடனசாஸ்திரம் முதலியவை உற்பத்தியானது இந்தியாவிலல்லவா? கணிதசாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், தர்க்க சாஸ்திரம் முதலிய தத்துவங்களை இந்தியாவன்றோ கிரீஸ் தேசத்திற்குக் கற்பித்தது. ஐரோப்பிய நாகரீகத்துக்கு அடிஸ்தானமாய் விளங்கின கிரீஸ் தேசத்துக்குக் குரு நம்மிந்தியா வல்லவா? அவ்வித பெருமை வாய்ந்த இந்தியாவின் தற்கால நிலைமையைப்பார்க்கும் பொழுது, நமக்கு நம்மைப் பெருமை பாராட்டிக்கொள்ள யாதொரு பாத்தியதையும் கிடையாது.

அரசாட்சி விஷயமாய் ஆராயப் புகில் இந்தியாவில் அரசர்கள் ஆண்டு வரும்போது, ஜனங்களாற் கூடிய சபையொன் றிருந்த தென்றும், தங்களிஷ்டம் போல் நடவாது எல்லாவிஷயங்களிலும், ஜனங்களது அபிப்பிராயத்தை அனுசரித்தே ராஜ்யபாரம் நடத்தப்பட்டதென்பதும் விளங்குகின்றன. நியாய பரிபாலனார்த்தம் சட்டங்கள் ஏற்படுத்திக் கொண்டு ஆண்டி முதல் அரசன்வரை சட்டத்திற்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்தார்கள். இதர ராஜ்யங்களைப்போல் இராஜத்துரோஹக் குற்றத்துக் கானவர்கள் மிகவும் சொற்பமே. இந்த இராஜ்ய சரித்திரத்தில் கலகங்களும் குழப்பங்களும் இருந்ததாகத் தெரியவில்லை. அநேக மதங்கள் பரவியும், அதனால் குத்துக்களும் கொலைகளும் நிகழ்ந்ததில்லை. நிகழாதென்றே நம்புகிறோம். (மஹம்மதியர் படையெடுப்புக் காலத்தில் தவிர) சரித்திரங்கள், இதிஹாஸ புராணங்கள் முதலியவற்றைப் பார்வையிடும் பொழுது, இந்தியாவானது 'இராஜபக்தி' 'தேசாபிமானம்' இவ்விரண்டையும் பரம்பரையாகப் பூஷணமாகக் கொண்டதென்றும், அரசர்கள் தன்னுயிரைப்போல் மன்னுயிரைக் காத்துக் "குடியோம்பிக் கொள்ளுமா கொள்ளுவோர்க்குக் காண்டுமே மாநிதியம்பல" என்னும் மெய்ம் மொழியை வேத மொழியாகக் கொண்டு, ஆறிலொரு பங்கு திறை வாங்கி, சுயலாபத்தைச் சிறிதும் கருதாது லோகோபகாரத்திற்குச் செலவழித்து வந்தனர் என்பதும் புலனாகின்றன. தேசத்தின் க்ஷேமத்திற்காக உடல் பொருள் ஆவியைத் தியாகம் செய்வதற்கும் ஆயத்தமா யிருந்த அரசர்கள் பலர் இருந்ததாகத் தெரிகிறது. சிலர் தியாகஞ்செய்து மிருக்கின்றனர். ஆகையால் நாட்டில் சமாதானமும் சந்தோஷமும் குடிகொண் டிருந்ததனால் ஜனங்களெல்லாம் இன்புற்று வாழ்ந்துவந்தனர். ஆகவே கவிசிரோன்மணிகளின் அதிசயோக்திகளின் உண்மை சிறிது ஆராயின் ஒவ்வொருவருக்கும் விளங்கும்.

இவ்விதம் மேன்மையுள்ள நமது தேசம் தாழ்ந்ததின் காரணம் என்ன? இத்தாழ்வினின்றும் விடுபட்டு மேன்மையான வாழ்வை யடைவதெப்படி? நம் தேசத்தில் நமது முன்னோர்களின் இரத்தம் இன்னமும் ஓடிக்கொண்டு தானிருக்கிறதென்பதை எவ்விதம் மற்றவருக்கு அறிவிக்கலாம்? நாம் நமது செல்வப்பெருக்கையும் கல்விப்பெருக்கையும் திரும்பவும் எப்படி யடையலாம்? எங்ஙனம் எவரும் மெச்சத் தகுந்த விதத்தில் நாம் வாழலாம்? எவ்விதம் நாம் உலகத்தாருக்குப் பழைய குருவாய் விளங்கலாம்? நமது ஆரியர்களின் பெருமையைத் திரும்பவும் பெருமைப் படுத்துவதெப்படி? நமது பெருந்தன்மையை உபயோகிக்கக் கூடிய மார்க்கம் யாது? எப்பொழுது நமது பழய ஆனந்தத்தை யடையப்போகிறோம்.?

இப்போது நமக்கிடையில் ஏற்பட்டிருக்கும் ஊக்கக்குறைவும், சுயபாஷை, சுயதேசம் முதலிய விஷயங்களைக் குறித்து அறியும் அவாவின்மையும், அவ்விஷயங்களை நன்கு போதிக்கும் 'ஆனந்தபோதினி' போன்ற ஆனந்தம் விளைக்கும் பத்திரிகைகளை வாங்கி வாசியாது, வீண் பொழுது போக்குவதுமே, நமது தாழ்வுக்குக் காரணம். கல்வியின் நோக்கம் இன்னதென்றும், ஜீவியத்தின் உத்தேசம் எது வென்றும், மனம் வாக்குக் காயம் முதலிய கருவிகள் சுத்தமாயிருப்பதாலுள்ள பயன் இன்னதென்றும் அறிந்து, காமம், குரோதம், மோஹம், லோபம், மதம், மாத்ஸரியம் ஆகிய இவ்வாறு தீக்குணங்களையும் அறவே யகற்றி, ஒற்றுமையுடன் நேசமாய் வாழ்ந்தால், நம் இந்தியாவானது பழய பொன்னாடாய் விளங்குமென்பது திண்ணம். அங்ஙனம் ஒவ்வொருவரும் வாழ்வதே சிறந்ததோர் பாக்கியம். இல்லாவிட்டால் நம் வாழ்வால் யாது யோக்கியம்?

என். சுப்பிரமணிய அய்யர்,
கிழக்குரத வீதி, நாகர் கோவில்.

---

## பள்ளிக்கூடம் போய்க் கெட்டுப்போனான்.

சித்திரை மாதம் ஆரம்பித்து 10–12. நாட்களிருக்கும். இது வரையில் பலமாக அடித்துவந்த ஓர் முரட்டு வாடை எங்கேயோ போய்விட்டது. இரண்டு மூன்று மாதங்களாக கடற்கரைப் பக்கமே போகாமலிருந்த ஜனங்கள் அப்பக்கம் திரும்பலானார்கள். தொந்தரவான மழை நின்றுவிட்டது. சரீரத்து பாதையான வாடை சாந்த மடைந்து தென்றலாக மாறிவிட்டது.

நானும் மற்றவர்களைப்போல அக்காற்றைச் சுவாசிக்கக் கடற் கரைக்குப் போகலானேன். அடடா! கடற்கரையில் காற்று மாத்திரமா உண்டு! என்னென்ன சுகங்கள்! என்ன வேடிக்கை! அஸ்தமிக்கும் சூரியனுடைய சாயல் வானமுழுதும் பரவி நீல நிறத்தைச் செந்நிறமாக்கி, மேகங்களைப் பல பல வர்ணங்களாகச் செய்து மனதை ஓர் புறம் கவரும். நாநா ரூபங்

களைத் தரித்த மேகங்கள் கொஞ்சங் கொஞ்சமாய் அவ்வவ் வுருவ மழிந்து புதிய புதிய உருவங்களாக மாறுவதைப் பார்க்க, நம் கண்ணுக்குப் புலப்படாத ஓர் அற்புத மாயாவியின் ஜால வித்தைகளாகத் தோன்றும். சில சமயங்களில் வானத்தின் ஓர் மூலையில் இருண்ட கார் மேகங்கள் மத்தியிலே க்ஷணத்துக்கு க்ஷணம் பல நிறங்களையுடைய மின்னற் கொடிகள் நா நா பக்கமும் கிளையோடிப்பாயும் அருமையான வாண வேடிக்கையு முண்டு.

நம் எதிரே தோன்றும் காக்ஷிகளுக்குப் பின்னால் ஒரு சூத்திரதாரி இருந்து தான் ஆநந்திக்கவோ அல்லது நாம் ஆநந்திக்கவோ விளையாடுவதாகவும் மனதுக்குப்படும்.

ஆ! எனது நண்பர்களே! சாந்திமயமான அவ்வேளையில் அலையோரமாக ஒருவித கவலையு மில்லாமல் ஆநந்தமாய் நடந்து போகும் பாக்கியத்தைப் பெற்றிருப்பீர்களாகில், ஒருகாலும் சாக்கடைத் துர் நாற்றத்தைச் சகித்துக்கொண்டு தெருத்திண்ணை மீது கும்பலாகக் கூடி வம்பளக்க நேரவே நேராது.

பிரகிருதியின் இவ்விதமான சௌந்தர்யங்களைக் கண்டானந்தித்துக் கொண்டே கரையோரமாய் மணலில் ஓர் மாலை நான் சாவகாசமாகப் போய்க்கொண்டிருந்தேன்.

அப்போது வெளியே ஸ்வேச்சையாக விளையாடிக்கொண்டிருந்த நண்டுகளெல்லாம் பயந்து ஓடிப்போய் வளைகளில் ஒளிந்துகொண்டன. ஆஹா! அவற்றுக்கு மனிதர்களிடத்தில் எவ்வளவு நம்பிக்கை! மனிதர்களோ ஒருவரையொருவர் நம்புவதில்லை. நண்டுகளுக்குள்ளே அங்ஙனமன்று அவற்றுக்கு மனிதனிடத்தில் நம்பிக்கைக் குறைவு.

அலைகள் ஓடோடியும் வந்து என் காலில்பாயும் விசித்திரத்தையும் கவனியாமல் அற்ப நண்டு கூட நம்பாத கூட்டத்திற் பிறந்தோமே என்ற சிந்தனையில் ஆழ்ந்தவனாகி மெதுவாகப் போய்க்கொண்டிருந்தேன். கொஞ்சநாழிகை ஆன உடனே என் நண்பர் சிவா ஓர் புறமிருந்து காற்றைச் சுவாசித்துக்கொண்டே வந்து என்னைச் சந்தித்தார். இருவரும் உல்லாசமாக வேடிக்கைப் பேச்சுகள் பேசிக்கொண்டே சோலைத்தாண்டான் குப்பம் நோக்கிச்சென்றோம்.

சிறிது நேரத்திற்குள் அங்கே போய்ச் சேர்ந்தோம். சோலைத்தாண்டான் குப்பமென்பது, கடற்கரையோரமா யுள்ள நீண்டதொரு தென்னஞ் சோலை. அதனுள் எண்ணிறந்த குடிசைகள் உண்டு. அவற்றுள் செம்படவர்கள் குடிசை அநேகம். நாங்கள் போனபோது சில செம்படவர்கள் காயப்போட்ட வலையைச் சுருட்டிக்கொண்டிருந்தார்கள். வேறு சிலர் மீன் பிடிக்கப் போவதற்குக் கட்டுமரத்தைத் தயாரித்துக்கொண்டிருந்தார்கள். குடிசைகளுக்குள்ளே ஒருவருமில்லை. ஆண் பெண் அனைவரும் கடற்கரையிலே இருந்தார்கள். நாங்கள் நேரே ஒரு கட்டு மரத்தண்டை சென்றோம். அஃதப்போது புறப்படவேண்டிய கட்டுமரம். அதனில், செல்பவர்கள் சுகமே, போய்த் திரும்புவதற்காகச் சமுத்திர தேவதைக்குப் பூசை போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களில் கிழவனாகக் காணப்பட்ட ஒருவனை நான் சில கேள்விகள் கேட்டேன். எங்களுக்குள் பின் வரும் சம்பாஷணை நடந்தது.

நான்:—அதென்ன ! நீங்கள் என்ன செய்கிறீர்கள் ?

கிழவன்:—நாங்கள் பூசைபோட்டுப் படைக்கிறோம்.

நான்:—யாருக்கு ?

கிழவன்:—சமுத்திர தெய்வத்துக்கு.

நான்:—எதற்காக ?

கிழவன்:—நாங்கள் மீன் பிடித்துக்கொண்டு சுகமாகத் திரும்புவதற்கு.

நான்:—ஆகையால் பூசைபோடாவிட்டால் ஆபத்து நேரிடுமோ ?

கிழவன்:—ஆம்.

நான்:—பூசை போட்டால் ஆபத்து வரவே வாராதோ ?

கிழவன்:—வராது. ஆனால் அவனவன் விதி யிருக்கிறதே. அவனவன் தலை யெழுத்தின்படி நடக்கும்.

இருந்தாலும் அங்கே ஆச்சரியந்தான் ஐயா, அந்தத் தேவதை நிசி 12 மணிக்கு உல்லாசமாகப் பவனிவரும் போது, என்ன வாண வேடிக்கை ! என்ன வெளிச்சம் ! அந்த மாதிரி மத்தாப்பு நான் தரையில் பார்த்ததே இல்லை. கேளுங்க சாமி ! ஒருநாள் அதாவது ஓரிரவு திரும்பிவருவதற்கு அநுகூலமான காற்றில்லை. அதனால் நடுச் சமுத்திரத்தில் நாங்கள் தங்கி விட்டோம். நடு ஜாமத்துக்குச் சரியாய் எதிரே ஒரு வெளிச்சம் தோன்றிற்று. மத்தியிலே தேவதை ஒரு பெரிய சுறுமீன் மேலே எறிக்கொண்டு வாண வேடிக்கையோடு புறப்பட்டது தான் தெரிந்தது. உடனே நாங்கள் கவிழ்ந்து குப்புறப் படுத்துக்கொண்டோம். நான் மாத்திரம் இலேசாகக் கடைக் கண்ணால் பார்த்தபோது பல நிறமான வெளிச்சங்கள் தெரிந்தன. ஆஹா ! என்ன அற்புதம் ! தேவ லோகத்து வாணவேடிக்கை ! சிறிது நேரத்தில் மறைந்துவிட்டது. அதனைச் சந்திக்கிறவர்களுக்கு ஆபத்து.

சரி பூசையாய் படைத்தாச்சு. இந்தாங்கோ தாம்பூலம் என்று சொல்லி என்னிடத்தில் நாலுவெற்றிலை இரண்டு பாக்கு இரண்டு வாழைப்பழம் ஓர் தட்டில்வைத்து நீட்டினான். நான் அதைப் பெற்றுக்கொண்டேன். என் நண்பருக்கும் ஒரு தாம்பூலம் கிடைத்தது.

பூசை முடிந்ததும் கட்டுமரம் புறப்பட்டுவிட்டது. அதை அனுப்பி விட்டு வந்த மற்றொரு கிழவன் எங்களிடம் வந்து "ஐயா ! இருட்டிப் போச்சு. இராத்திரி என் குடிசையில் தங்கிச் சாப்பிட்டுவிட்டுக் காலை நீங்கள் போகலாம் ! நல்ல மீன் கொழும்பு இருக்குதங்கோ" என்று சொன்னான்.

நான் பிராமணனானதலால் என் நண்பர் அந்த வார்த்தையைக் கேட்டுச் சிரித்தார். நான் அதற்கு "அவனுடைய அன்பைக் கவனியப்பா. எவ்வளவு பிரியத்தோடு 'அதிதிதேவோ பவ' என்கிற உபநிஷத் வாக்கியத்தை அநுசரித்து நடக்கிறான் பார்." என்றேன்.

இது பட்டிக்காட்டுச் சம்பிரதாயம்.

உடனே நான் கிழவனை நோக்கி "உன் அன்புக்கு மெச்சினேம். நீ போய்ச் சுகமாக உன் பெண்டு பிள்ளைகளோடு சாப்பிடு. நாங்கள் அசலூரன்று; இதோ வீட்டுக்குப் போகிறோம்" என்று சொல்லிவிட்டுக் கரை

யோரமாய்ச் சல சல வென்று சத்தம் போட்டு விளையாடிக்கொண்டிருந்த பசங்களிடம் வந்தோம்.

அக்குழந்தைகள் முன் சென்ற கட்டுமரத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே "உனக்கு நீயத் தெரியுமா? உனக்கு நீயத் தெரியுமா?" என்று ஒருவரை யொருவர் கேட்டுக்கொண்டிருந்தார்கள். "எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும்" என்ற பதங்களே எல்லாருடைய வாயிலிருந்தும் வந்தன. அதிக பல ஹீனமாகக் காணப்பட்ட ஒருவன் மாத்திரம், அவனுடைய முறையில் ஒன்றும் சொல்லாமல் சும்மா இருந்தான். அவனுக்கு நீயத் தெரியாதென் றேற்பட்டது. உடனே எல்லோரும் சேர்ந்து அவனைக் கேலி பண்ண ஆரம்பித்தார்கள். அந்தக் கேலிகளெல்லாம் என் ஞாபகத்திலில்லை. அவர்களில் துருதுருத்தவனுகக் காணப்பட்ட 10 வயதுள்ள ஓர் பையனின் கேலி வார்த்தை மாத்திரம் இன்னும் என் புத்தியை விட்டகலவில்லை. அதாவது:

"அடே! நம்ப செவுத்தானுக்கா! அவனுக்கு என்ன மாடா நீயத் தெரியும். அவன்தான் பள்ளிக்கூடம் போய்க் கெட்டுப்போனுனே."

இந்த வார்த்தைகள் நான் ஒரு உபாத்தியாயரானதால் என் மனதில் ஆழமாய்ப் பதிந்துவிட்டன. ஆஹா! செம்படவனுக்கு நீஞ்சக் கற்றுக் கொடுக்காமல் அ, ஆ கற்றுக்கொடுப்பதால் பிரயோஜனமில்லை யென்பதை அப்பையன் நன்கு உணர்த்தினன்.

அதிலிருந்து இப்போது உலகத்தில் நடந்துவரும் பள்ளிக்கூடங்களை யெல்லாம் உண்மையில் ஜனங்களுக்குப் பயன் படச் செய்யவேண்டியதென்ற எண்ணம் உண்டாகிறது.

எந்த ஜாதிப்பையன் வந்தாலும், சிறைச்சாலைகளில் எல்லாருக்கும் ஒரே அளவு சாப்பாட்டுத் திட்டம்போல, ஒரே படிப்பா! ஆஹா நல்ல கல்வி! ஒவ்வொரு தொழிலாளிக்கும் அவன் தொழிலோடு சிறிது கல்வியும் புகட்டி வந்தால் கல்விக்கும் பயனுண்டு. தொழிலுக்கும் பயனுண்டு. அஃதங்ஙனமிராததால் தான் இப்போது நமது தேசத்தில் கைத்தொழிலே மறைந்து போயிற்று; சில கைத் தொழில்கள் மறந்தேபோயின. எல்லாரும் பி.எ. தொழிலா பி.எ.? இல்லை. இல்லை. இங்கிலீஷ் பிரான்ஸ், எலதீன் முதலிய பாஷைகளில். இருக்கட்டும் அதோடு தொழிலிலும் பி.எ. வானல் எவ்வளவு க்ஷேமம். தொழில் விருத்தியானலே போதும். பி.எ. வேண்டியதேயில்லை, அதற்கு நேர் விரோதம் நடந்து வருகிறது. நாம் என்ன செய்வது! அதிகாரம் நம்மிடத்தில் இல்லையே. ஆயினும் அந்தச் சிறிய செம்படவ பையன் சொன்ன வார்த்தை என் மனதை இன்னும் உறுத்துகிறபடியால், அந்தந்த ஜாதி ஜனங்களைக் கொண்டு அவர்களுக்குள்ளே ஒற்றுமையாகப் பணம் சேகரித்து, ஒவ்வொரு ஜாதிக்கும் ஓர் பாடசாலை ஸ்தாபிக்கச் செய்து அதில் முதலாவது கைத்தொழில் இரண்டாவது பாஷை இவ்விதமான கல்வி ஏற்பாடு செய்யலாமென்ற எண்ணத்தோடு நான் 7 மணிக்கு வீட்டுக்குத் திரும்பினேன்.

சுப்ரமண்யம்.

---

## தபால் கொள்ளைக்காரர்கள்.

(318-ம் பக்கத் தொடர்ச்சி.)

நால்வரும் உள் நுழைந்து தோட்டத்தைக் கடந்து முதல் வாசற்படியருகிற்சென்று ஒரு பக்கமாய் ஒதுங்கி நின்றார்கள். அவர்களில் ஒருவன் மட்டும் முன்னே சென்று கதவைத்தட்டினான். உடனே கறுத்தநிறமுடைய ஒரு நீக்ரோமாது வந்து கதவைத் திறந்தாள். அம்மனிதன் உன் எஜமானன் வீட்டிலிருக்கிறாரா என்றான். அவள் ஆம் புத்தகசாலை யறையில் இருக்கிறார் என்றாள். அம்மனிதன் நாங்கள் அவரைக்கண்டு பேசவேண்டும். இதோ இச்சீட்டைக் கொண்டுபோய் அவரிடம் கொடு என்று ஒரு சிறு துண்டுக் கடிதத்தை யெடுத்து அதில் ஏதோ மூன்று நான்குவரிகள் எழுதிக் கொடுத்தான்.

அம்மாது அதை யெடுத்துக்கொண்டு போய்ச் சீக்கிரமாகவே திரும்பி வந்து "வாருங்கள், உள்ளே யுடனே அழைத்து வரச்சொன்னார்" என்றாள். நால்வரும் அவள் பின்னால் உள்ளே பிரவேசித்தார்கள். அம்மாது அவர்களை யழைத்துப்போய் மேல் மாடியிலிருக்கும் புத்தக சாலைக்குள் கொண்டுபோய் விட்டுச்சென்றாள்.

அங்கு அச்சமயம் இரண்டுபேர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்கள் எதிரிலிருக்கும் மேஜைமேல் சாராய புட்டிகளும் சிற்றுண்டி பழவர்க்கங்கள் முதலியவைகளும் வைக்கப்பட்டிருந்தன. இரண்டு ஆட்களும் குடித்துக்கொண்டிருந்தார்கள். அவர்கள் நமது சாமிநாதனும் இரங்கநாதனுமே. சாமிநாதன் அப்போதே நன்றாய் வெறி யேறக் குடித்து விட்டுத் தடமாடும் நிலைமையிலிருக்கிறான்.

உள்ளே வந்த நால்வர் முகங்களும் தீப வொளியில் நன்றாய் விளங்கின. தந்திரம், சூது, களவு, கன்மனம் முதலிய துர்க்குணங்கள் யாவும் பிரகாசித்தன. சாமிநாதன் வந்தவர்களை நோக்கி "ஆ ஜக்கா நீயா! க்ஷேமந்தானே. ஆ, வரதா! குள்ளா! யாவரும் க்ஷேமந்தானா? உங்களைப்பார்க்க மிக்க சந்தோஷம். ஏ—சாராயம். இதில் யாவரும் குடித்துப் பாருங்கள். ஏ. ஆ. சாராயம். நீங்கள் நல்ல......குடித்துப் பாருங்கள்" என்று தடுமாற்றத்தோடு கூறினான்.

வந்தவர்களின் மேற்கூறப்பட்ட மூன்று கள்ளர்களுமே தபால் கொள்ளையில் சேர்ந்தவர்கள். முதல் கூறப்பட்ட ஜக்கன் என்பவனே அக்கள்ளக் கூட்டத்தின் தலைவன். சாமிநாதன் கூறியபடியே கள்ளர் தாராளமாய்க் குடிக்க ஆரம்பித்தார்கள்.

சாமிநாதன் ஜக்கனை நோக்கி "அங்கே கீழே யெல்லாம் சரிப்படுத்தி விட்டாயா?" என்றான்.

ஜக்கன்.—எங்கே அரசமரத் திருப்பத்தில் தானே? ஆகா. எல்லாம் சுத்தமாக்கிவிட்டேன்.

சாமி.—பையை யெடுத்துக்கொண்டா யல்லவா?

ஜக்கன்.—ஆகா.

சாமி.—பேஷ். இந்தத்தாம் குற்றத்லைதக்கண்டு பிடிப்பவர்களுக்கு நல்ல திண்டாட்டம். ஒவ்வொரு தபாலாபீசைச் சேர்ந்த பணம் இருக்கும்

கடிதங்கள் அகப்பட்டிருக்கின்றன. தபால் இலிகிதனைச் சிறை செய்வதாயின் எல்லாத் தபால்ஆபீஸ் இலிகிதர்களையும் சிறைசெய்யவேண்டும்.

**ஜக்கன்.**—அது சரிதான். நீ யுன் வேலையைச் சாக்கிரதையாய்ச் செய்திருக்கிறாயா ? உன் மேல் சந்தேகமுண்டாகாதல்லவா ? ஏனெனில் அகப்பட்டுக்கொண்டால் நாங்கள் யாவரும் அகப்பட்டுக் கொள்வது நிச்சயம்.

**சாமி:**—நானா அகப்படுவேன் ! என் மேல் ஒருபோதும் சந்தேகப்படமாட்டார்கள். நான் மூன்று நான்கு வருடங்களாய் நம்பகத்தோடு தபால் இலாகாவில் உழைத்திருக்கிறேன். என் மேல் அவர்களுக்குச் சந்தேகமுண்டாகாது. நான் அகப்படமாட்டேன். ஆ. ஒன்று கூற மறந்துவிட்டேன். நமது இரகசியம் ஒருவனுக்குத் தெரிந்திருக்கிறது. அவனோ நம்மை முடிவாய் அமிழ்த்துகிற வரையில் கண் மூடமாட்டான்.

ஜக்கன் இதைக்கேட்டதே துள்ளியெழுந்து "யாரவன் ? அவனை யொழித்துவிட வேண்டும்" என்று மிக்க ஆத்திரத்தோடு கேட்டான்.

**சாமிநாதன்:**—"அவன் தாபாலிலாகாத் துப்பறிபவனாகிய ஆனந்தவிங்" என்றான்.

இதைக்கேட்ட ஜக்கன் பேரிடி விழுந்தவன் போல் ஆய்விட்டான். "அய்யோ ஆனந்தவிங்கா ? அப்பா அவன் கையில் அகப்படலாகாது; முன் ஒரு தரம் அவன் வழிப் பறிகொள்ளைக்காக எனக்கு மூன்று வருடம் தண்டனை கிடைக்கச் செய்தான். நான் போன வருடந்தான் சிறைச்சாலையினின்று தப்பித்துக்கொண்டு வந்துவிட்டேன். நமது இரகசியம் அவனுக்குத் தெரிந்து விட்டிருந்தால் அடியோடு மோசம் நேர்ந்த மாதிரியேதான். அவனை யொழித்தாலன்றி நாம் பிழைக்கமாட்டோம்" என்றான்.

இது வரையில் மௌனமாயிருந்த இரங்கநாதன் அப்போதுதான் வாய் திறந்து, "ஆம்; நாமெல்லோரும் உடனே யிதே வேலையாய்ப் புறப்பட்டு அவனை யொழிக்கும் வரையில் நிற்கலாகாது. அந்தப்படி யாவரும் பிரமாணம் செய்யுங்கள்" என்றான்.

உடனே யாவரும் அப்படியே சத்தியம் செய்தார்கள்.

**சாமிநாதன்:**—"இதற்காகவே நான் உங்களை யின்று இங்கு வரவழைத்தேன்; நாம் உடனே அவ்வேலையைத் தொடங்கவேண்டும்" என்றான்.

**ஜக்கன்:**—"இந்த இரவே இப்போதே யவனைக் கண்டு பிடிக்கப் புறப்பட வேண்டும்" என்றான்.

**சாமிநாதன்:**—இல்லை யில்லை. இன்றிரவு நமக்குப் பிரத்தியேகமான விசேஷ வேலை யொன்றிருக்கிறது.

**இரங்க:**—"ஆம் ஆம். நான் கூறிய அந்த மற்றொரு ஆசாமியை யழைத்து வந்தாயா ?" என்றான்.

**ஜக்கன்:**—ஆகா இதோ நமது கருணானந்த சுவாமிகள். இவர் நெடு நாட்சனாய் வெளி நாடுகளில் குருத்தொழில் செய்து வந்தார். பிறகு மனஸ்தாபத்தால் விட்டுவிட்டார். ஆயினும் நமக்காக இச்சடங்கைச்

செய்யச் சம்மதித்திருக்கிறார்." என்று தங்களோடு கூட வந்த நான்காவது மனிதனைக் காட்டினன். சற்று குள்ளமாய்க் குழிந்து ஆழ்ந்த கீழ்ப்பார்வையையுடைய ஒரு மனிதன் கறுத்த நெடுஞ்சட்டையணிந்துகொண்டு இதுகாறும் மௌனமாயிருந்தவன் இப்போதெழுந்து நின்று வீட்டெஜமானுக்கு வந்தன மளிக்க முயன்றான்.

அதற்குள் வெறியேறக் குடித்திருக்கும் யாவரும் எழுந்து குருவுக்கு வந்தன மளித்தார்கள். அதற்குள் சாமிநாதன் தள்ளாடிக்கொண்டே நடந்து வந்து குருவின் தோளைப்பற்றிக்கொண்டு,

"ஆகா! ஆ! தாங்கள் வந்தது எனக்கு மிக்க சந்தோஷம். தங்கள் சகாயத்திற்காகத் தங்களுக்கு ஐந்நூறு ரூபாய் கொடுக்கப் போகிறேன்" என்றான்.

குரு.—மிக்க சந்தோஷம். எனக்குப் பணத்தைப்பற்றி அவ்வளவு அக்கரையில்லை. தங்கள் கௌரவம் பொருந்திய அறிமுகம் கிடைத்ததே போதும். இக்கௌரவமே எனக்குப் போதுமானது.

சாமிநாதன்:—ஆகா! ஒரு அற்ப சங்கதி மறந்து விட்டேன். ஒரு சமயம் அந்தப்பெண் என்னை மணம் புரிந்துகொள்ளத் தனக்குப் பிரியமில்லையென்றாலோ?

குரு:—அதைப்பற்றி யெல்லாம் தாங்கள் சற்றும் யோசனை செய்யவேண்டாம். அதெல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன். இதைப்பற்றி முன்னமே எனக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சாமி.—"சரி. சரி. தாங்கள் திருப்தி யளிப்பீர்கள் என்று தெரிகிறது" என்று கூறிவிட்டு இரங்கநாதனை நோக்கி, "சரி அப்பெண்ணை யழைத்து வருகிறதுதானே." என்றான்.

இரங்கநாதன் பார்த்தான். சாமிநாதன் நன்றாய் வெறி யேறக்குடித்துவிட்டிருக்கிறான். எல்லாம் தன் கருத்தின்படி நிறைவேறி வருகிறது. அவன் இன்னும் கொஞ்சம் அதிகமாய்க் குடித்துவிட்டால் தன் எண்ணப்படி விவகாரம் நடவாது. எல்லாம் அடியோடு கெட்டுவிடும்.

சாமிநாதன் என்ன தந்திரம் அறிந்தவனாயினும் இரங்கநாதன் தனக்கு நன்மையே செய்கிறதாய் எண்ணியிருக்கிறானே யன்றி அவன் மனதிலிருக்கும் உள் கருத்துகளையும், சுய அனுகூலமான எண்ணங்களையும் அவன் சற்றேனும் உணரான்.

சாமிநாதன் பெண்ணை யழைத்து வரும்படி கூறியதே இரங்கநாதன் தன் கருத்து முடிய இதுவே சமயமென்று கருதித் துரிதமாய் எழுந்து வீட்டிற்குள் சென்றான்.

சாமிநாதன் இதற்கிடையில் குருவுக்கு மிக்க அன்பான மொழிகளைக் கூறிச் சாராயம் அருந்தும்படி வற்புறுத்தவே, குருவும் சற்று நேரத்திற்குள் மற்றவர்களைப் போலவே தாராளமாய் அருந்தினன். அதனால் அவரும் மற்ற பேர் நிலைமைக்கு வந்து விட்டார்.

(தொடரும்.)

ஆரணி-குப்புசாமி முதலியார்.

## ஓர் அறிக்கை.

1921-ஆ ஜூன்மீ 30 உக்குள் நம்மிடம் வந்து சேரும்படி முன்னடிச் சந்தாத் தொகையை யனுப்பினவர்களுக்கு ஏற்கனவே யாங்கள் செய்திருந்த விளம்பரப்படி "துந்துபி வருடத்திய ஆனந்தபோதினி திருக்கணித பஞ்சாங்கம்" இனமாக இன்று (9—3—1922) அனுப்பப்பட்டிருக்கிறது.

## பொது விஷயங்கள்

### அமெரிக்காவில் ஸ்திரீ நாயகம்.

வாஷிங்டன், பிப்ரவரி 27—அமெரிக்காவில் புருஷர்களைப் போல் ஸ்திரீகளும் சட்டப்படி ஓட்டுக் கொடுக்கப் பாத்திய முள்ளவர்களென்று ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இதைப்பற்றிய சட்டம் 1919-ம் வருஷத்திலேயே நிறைவேற்றப்பட் டிருக்கிறது. ஆனால் ராஜீய சாஸ்திர முறைப்படி அதைப்பற்றிய விவாதம் இதுகாறும் நடந்து வந்தது. உயர்தர கோர்ட்டில், சட்டப்படி அது சரியான தென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

### சர்வ தேச வர்த்தகம்.

லண்டன், பிப்ரவரி 27—சர்வதேசக் கார்பொரேஷனின் நிர்மாணக் கமிட்டியார் 200-லக்ஷம் பவுன் முதலுடன் சர்வ தேச கார்பொரேஷன் ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்று தீர்மானித்திருக்கின்றனர். இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இடாலி, பெல்ஜியம் சமமாகப் பங்கு கொடுக்கவேண்டுமென்றும், ஜப்பான் அமெரிக்கா முதலிய மற்ற தேசங்கள் விரும்பினால் அவர்களும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் சிபார்சு செய்திருக்கின்றனர்.

திறப்பு விழா:—நேப்பியர் பார்க்கில் சாக்கடை நீர் இறைக்கும் தொழிற்சாலைக் கட்டிட வேலை முடிவடைந்து வருகின்றது. இதை ஏப்ரல் மாதம் 8-ந் தேதி லேடி வில்லிங்டன் திறந்து வைப்பார்.

### ஒரு விநோத சம்பாஷணை.

கான்பூரில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஐந்து பேர் கைதி செய்யப்பட்டுச் சிறைச்சாலையில் விசாரிக்க பட்டார்கள். விசாரணையின் பயனாய் மேற்கூறப்பட்ட ஐவரில் நான்கு பேருக்கு ஒவ்வொரு மாத வெறுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஐந்தாவது நபரில் வழக்கு நடைபெறும்போது கீழ்வரும் சம்பாஷணை கைதிக்கும் மாஜிஸ்ட்ரேட்டுக்கும் நடந்தேறியது. இறுதியில் கைதி புத்திஸ்வாதீன மற்றவர் என்று கருதப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். சம்பாஷணை வருமாறு :—

மாஜிஸ்ட்ரேட்:—(கைதியைப் பார்த்து) உன் பெயர் என்ன ?

கைதி:—என் பெயர் காங்கிரஸ்.

மா:—உன் தகப்பனார் பெயர் என்ன ?

கை:—கிலாபத்.

மா:—உன் பாட்டனார் யார் ?

கை:—சுயராஜியம்.

மா:—உன் வீடெது ?

கை:—ஜெயில்.

மா:—விட்டு விட்டால் எங்கே செல்வாய் ?

கை:—ஜெயிலுக்கு.

மாஜிஸ்ட்ரேட் கைதி பைத்தியம் பிடித்தவர் என்று கருதி விடுதலை செய்துவிட்டார்.

"ஜமீன்தார்"

# "ஆனந்த போதினி" பஞ்சாங்கம்.

துந்துபிஞு சித்திரைமீ—சாலிவாகனம் 1845—கலி 5024

பசலி 1331—கொல்லம் 1097-98—ஹிஜரி 1340

இங்கிலீஷ் 1922ஞு ஏப்ரல்மீ-மேமீ

| சித்திரை | ஏப்ரல் | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 1 | 13 | வியா | து36-38 | சுவா-18-32 | அ18-32சி | வருஷப்பிறப்பு |
| 2 | 14 | வெ | திரி31-25 | விசா-14-50 | சித்-60 | தானியம் செலவிட |
| 3 | 15 | சனி | சது27-58 | அனு-12-45 | சித்-60 | பிரயாணம் செய்ய |
| 4 | 16 | ஞா | பஞ்26-28 | கேட்-12-27 | ம12-27அ | வராஹ ஜயந்தி |
| 5 | 17 | திங் | சஷ்26-50 | மூல-14-3 | சி14-3ம | இரவில் தனியநாள் |
| 6 | 18 | செ | சப்3 -20 | பூரா-17-38 | சி17-38பி | கரிநாள் பகலில் தனிய |
| 7 | 19 | புத | அ33-0 | உத்-22-50 | அ22-50சி | பிரயாணம் விலக்கப்பட் |
| 8 | 20 | வியா | நவ38-5 | திரு-29-30 | சித்-60 | ரிஷபாயணம் நா-52-38 |
| 9 | 21 | வெ | தச-45-3 | அவி-36-58 | சித்-60 | தானியம் வாங்க |
| 10 | 22 | சனி | ஏக51-35 | சத-44-48 | அ44-48ம | சர்வ ஏகாதசி |
| 11 | 23 | ஞா | துவ57-50 | பூரட்-52-25 | சி52-25அ | மந்திரம் ஜெபிக்க |
| 12 | 24 | திங் | திர60 | உத்-59-30 | சித்-60 | மச்சஜயந்தி |
| 13 | 25 | செ | திர3-33 | ரேவ-60 | சித்-60 | |
| 14 | 26 | புத | சது8-5 | ரேவ-5-35 | ம5-35அ | |
| 15 | 27 | வியா | ● 11-43 | அசு-10-35 | அ10-35சி | |
| 16 | 28 | வெ | பிர13-50 | பர-14-20 | சித்-60 | |
| 17 | 29 | சனி | துதி14-48 | கிரு-16-58 | அ16-58சி | |
| 18 | 30 | ஞா | திரி14-38 | ரோ-18-23 | சித்-60 | |
| 19 | 1 | திங் | சது13-15 | மிரு-18-45 | சித்-60 | |
| 20 | 2 | செ | பஞ்11-3 | திரு-18-10 | ம18-10சி | |
| 21 | 3 | புத | சஷ்7-48 | புன-16-40 | சித்-60 | |
| 22 | 4 | வியா | சப்3-38 | | | |
| | 1922ஞு மேமீ | | அ58-48 | பூச-14-18 | சித்60 | இரவில் தனியநாள் |
| 23 | 5 | வெ | நவ53-18 | ஆயி-11-10 | மர-60 | பகலில் தனியநாள் |
| 24 | 6 | சனி | தச47-8 | மக-7-23 | அ7-23சி | பிரயாணம் விலக்க |
| 25 | 7 | ஞா | ஏக40-48 | பூர-3-5 | சித்3-5அ | சர்வ ஏகாதசி |
| | | | | உத்-58-23 | | |
| 26 | 8 | திங் | து33-50 | அஸ்-53-28 | சித்3-28பி | நரசிம்ம ஜயந்தி |
| 27 | 9 | செ | திர27-0 | சித்-48-43 | சித்5-60 | சித்ரகுப்த பூஜை |
| 28 | 10 | புத | சது20-30 | சுவா-44-20 | சித்60 | கூர்மஜயந்தி |
| 29 | 11 | வியா | ○14-30 | விசா-40-43 | சித்-60 | சித்திரா பௌர்ணமி |
| 30 | 12 | வெ | பிர9-38 | அனு-38-10 | சி-38-10ம | வைசாக பகுளம் |
| 31 | 13 | சனி | துதி5-50 | கேட்-36-58 | சித்-60 | ஆயுதம் பயிற்ற |

| | | | |
|---|---|---|---|
| புகே | | | |
| புத | 4-தனு செ<br>7-மே புத<br>12-ரிஷ சு<br>21-ரிஷபுத | | |
| | | | |
| | செ | | ராகு சனி |

PRINTED & PUBLISHED BY N. MUNISAWMI MUDALIAR AT THE "ANANDA BODHINI" POWER PRESS, 15, VENKATESA MAISTRY STREET, MADRAS.